ஞாயிறு வெளியீடு. விலை 0–1–3. REGD. No. M. 4642.

# திராவிடநாடு

மலர் 3. | 25–3–45 | இதழ் 52.

## எங்கே?

★

ஆட்சி பெறுவ தெங்கே?— இந்திய சுய
ஆட்சி பெறுவ தெங்கே?

ஆரியர் சூழ்ச்சியில் ஆசைகொண்டலைந்து
மாறிமாறி நித்தம் தாறுமாறு செய்தால் (ஆட்சி)

ஏய்த்துப் பிழைக்குமோரு சாத்திரக்குப்பைதனைப்
பார்த்துப் பார்த்துநாம் வியர்த்துயிர் நீத்தால் (ஆட்சி)

வீட்டிலுட்கார்ந்து காந்தீயத் திட்டத்தின்
ராட்டையே நாளெலாம் சுழற்றிக்கொண்டிருந்தால் (ஆட்சி)

[முதுகுன்றத்தான்.]

# இன்ப வாழ்வு

பாரதிதாசன்

**புரட்சிக்கவியின் அழகுநடையும் அரிய கருத்தும் கண்டு களித்திருக்கிறீர்கள். கவிதைமட்டுமல்ல, உரை நடையும், உயரிய, உயிரூட்டும் வகையுள்ளதாக அமைந்திருப்பதை அறிவிக்க இதோ, அவருடைய வசனம்! வசனத்திலேயும் அந்த வசீகரவாசம் வீசக்காண்பீர்கள்.**

வாழ்வு என்பது உயிர்வாழ்தல். அது பிறப்பு இறப்பு இந்த இரண்டின் இடையில் உள்ளது.

வாழ்வின் பயன் இன்பவாழ்வு வாழ்தல். இதன் மற்றொரு முனை துன்பவாழ்வு. உயிர்கள் இயல்பாக விரும்புவது இன்பவாழ்க்கையே. துன்பவாழ்க்கை உயிர்களுக்கு எட்டிக்காய்.

''இன்பவாழ்வையடையும் வழி எது?'' இது உலக மக்களிற் பெரும்பான்மையோரின் கேள்வி.

சமத்வம், சகோதரத்வம், சுதந்தரம் ததும்பும் உள்ளம்வேண்டும், அதன்பிறகு வெற்றி, அதன்பிறகு இன்பவாழ்வு.

இன்னொரு முனை நமக்குத்தெரிந்தது தான். பேதம்—விரோதம்—பந்தம்இவை உள்ளத்தில் இடம்பெற்றநிமிஷத்தில் எட்டிக்காய் வாழ்வு வந்துசேரும்.

அரசு; அன்றி ஓர் ஏழைக்குடி; இருவரும் மனிதர்; மக்களின் சந்தர்ப்பபேதத்தால் ஏற்படும் நிலையை நீக்கிப்போட்டு அனைவரும் மக்கள் என்று கொள்ளும் தன்மை ஒப்பு எனப்படும். சமத்வம்—ஒப்பு இரண்டுக்கும் ஒரே அர்த்தம்.

உலகம் ஒருதாய். உலகஇன்பம்தாயின் திருமுலைப்பால், பாலுண்ணத்தாவும் மக்களின் மாறுபடாத மனோபாவம் உடற்பிறப்பு எனப்படும். சகோதரத்வம்-உடற்பிறப்பு இரண்டுக்கும் ஒரே அர்த்தம்.

உலகம் பொது, உலக இன்பம்பொது. மக்கள் தமக்குரிய இன்பத்தை அடையத் தடங்கலின்றிவிடுபட்டதன்மை,விடுதலை. விடுதலை—சுதந்தரம்.

ஒப்பு—உடற்பிறப்பு-விடுதலை! நினைத்துப்பாருங்கள்—இந்நிலையடைந்த மக்கள் இன்பவாழ்க்கையின் எல்லைகாண்பவர்.

ஒரு தன்மைவாய்ந்த மக்கள்பால் உயர்வுதாழ்வு பாராட்டுவது மாறு. மாறு என்பது பேதம். ''தனக்குண்டு பிறருக்கில்லை'' இதுபகை. பகை—விரோதம். மனிதன்மனிதனுக்குக்கட்டுப்படல்கட்டு. கட்டு—பந்தம்.

மாறு-பகை-கட்டு இவைகளில் அகப்பட்ட மக்களின்நிலை துன்பவாழ்வு; அது சாக்காட்டின் ஒட்டு.

மக்களுக்கு ஏழ்மை ஒரு சந்தர்ப்பம். செம்மை ஒரு சந்தர்ப்பம். எழுச்சி ஒரு சந்தர்ப்பம். சோர்வு மற்றொரு சந்தர்ப்பம். அறிவு மலர்ச்சி, அறிவுமழுங்கம் ஒவ்வொரு சந்தர்ப்பங்கள்!

மக்களின் ஏழ்மை செம்மையாதல் உண்டு. சோர்வுற்ற உள்ளம்எழுச்சியடைதல் உண்டு. மழுங்கிய அறிவு ஒளி பெறுவது உண்டு.

ஏழைகள் தமக்கேற்பட்ட ஏழ்மைநிலையை அவர்கள் உதறித்தள்ளச் சந்தர்ப்பம் இன்றிச் செம்மையுடையவர் தடைசெய்



யலாகாது. தடைசெய்துமக்களைத்துன்புறுத்தலாகாது. துன்புறுத்திச்சாகடிக்கலாகாது. சாகடித்துச் சமுகத்தை இல்லாமற்பண்ணலாகாது. அப்படிச்செய்து தாமும் மண்ணோடுபோவதற்கா திட்டம் போடுவது? ஏழைகள் மரக்கட்டைகள் அல்லர்.

''பண்டைப் பிரஞ்சுதேசம்''—அவள் தன் முக்காலே மூன்று வீசம் பங்குமக்களைக் கட்டிக்கொண்டு கண்ணீர்விட்டு அழுதுகொண்டிருந்தாள். பிரபுக்கள். அரசச்செல்வாக்குடையவர்கள், ஏதாச்சாதிகாரிகள், ஏழைமக்கள்மேல் ஆழ உட்கார்ந்துகொண்டனர். பேதம்—விரோதம்—பந்தம் தலைவிரித்தாடின. சமுகம் செத்துப் போகாவிட்டாலும்சாக்காட்டுக்கு ஒருநூல் இடைவெளிதான்பாக்கி.

''செத்துத்தான் போவதா?'' சாவதற்குமுன் அவர்கள் தமக்குள் இக்கேள்வியைக்கேட்டுக்கொண்டார்கள். பேதம், விரோதம் இவைகளை விலக்கி ஒன்றுபடுவதா? இதற்குப் பிராஞ்சு மக்கள்எல்லாரும்ஒத்துக்கொண்டனர். கட்டைவிலக்க எழுவதா? உடனே ஆம்என்றனர். ஏழை மக்கள் அனைவரும், அதிகாரச்செறுக்குடையவர்க்கு ஓர் இறுதிக்கடிதம் தயாரித்தனர். இதை அவர்களின் புழுங்கிய உள்ளம் கொண்டுபோயிற்று. ஏழைகளின் இவ்வெண்ணத்தை அதிகாரங்கொண்டவர்கள் கவனிக்கவேயில்லை.

''எமக்குள் பேதம்தீர்ந்தது! ஒப்புடையவர்களாய்விட்டோம் விரோதம் தீர்ந்தது. நாங்கள் அனைவரும் சகோதரர். விடுதலையடைந்தோம்—இதற்குக் குறுக்கில் படுக்கும் கிறுக்கர்களே திருந்துங்கள்! உம்மைக்காத்துக்கொள்ளுங்கள்.

எழுச்சியற்ற உள்ளம் இந்த நிலைக்கு ஏறியது—இந்த ஸந்நத்த நிலையை ஆளுந் திமிர்பிடித்தவர்கள் புறக்கணிக்கலாமா? அவர்கள் மதம்பிடித்தநித்திரையிற்கிடந்தனர். நடந்ததென்ன தெரியுமா? ஏழையர் எழுச்சியுடைந்தனர்;வீராவேசம்ஆயினர். அவர்கள் தமது நிலையிலிருந்து மறுமுனைக்கே ஒரே அடியாய்க்குறிவைத்தனர். இடையில்நின்ற—முடி—பணம்—செறுக்கு—அட்டகாசம் தூள்தூளாய்ப் பறந்தன.

பிராஞ்சு மக்கள் இன்பவாழ்வில்குதித்தனர்.

மக்களின் உள்ளம்—சமத்வ நிலை—சகோதரத்வநிலை — சுதந்தரநிலையடைய வேண்டும். வெற்றிகிடைக்கும். இன்பவாழ்வடையலாம்.

பிராஞ்சு தேசத்து மக்கள் தங்கள்விழி பிதுங்கும் நேரம்—ஏதுமற்று மண்ணாகப் போகும் நேரம்—அதிகாரக்கிறுக்கர்கள் தலையில் ஏறி அழுந்தும் நேரம்—இப்படிப்பட்ட நிலையிலா அவர்கள் சமத்வ சகோதரத்வ சுதந்திர நிலையை அடைந்தனர்? நம்பமுடியுமா?

ஆம், அந்த அந்தஸ்தே—இம்மூன்றும் முளைத்துச் செழிப்புறஏற்றது. அந்தநிலைமையில்தான் இம்மூன்றும் பிராஞ்சியர் உள்ளத்தில் சொலித்தன. அதனால்தான் வெற்றி; அதனால்தான் இன்பம், வேறு பேச்சில்லை. நீயும்உன்உள்ளத்தும், வெளியிலும் பேதத்தை ஒழி, சமத்துவத்தை ஆக்கு! விரோதத்தை அகற்று. சகோதரத்வத்தைக்கொள்! பந்தத்தை நீக்கு. விடுதலைகொள்! இம்மூன்று நிலையும், நீ கையை நீட்டிப்பெறத்தக்க பொருள்கள் என்றுகூட நினைத்திருக்கக்கூடும். மக்கள் உள்ளம் இம்மூன்று வகையான—நல்ல நிலையை அடைந்தால் இன்பம் அடைவார்கள் என்பதைப் பிராஞ்சியர் பழஞ் சரித்திரம் நன்றாக விளக்கிக்காட்டுகிறது.

(11-ம் பக்கம் பார்க்க)

# நிகோலாஸ் தீர்ப்பு

C. N. A.

இந்தியா சென்றேன். இந்தியனைக் காணவில்லை!—என்ற நிக்கோலாசின் வாசகத்தைக்கண்டு கோபங்கொண்டுள்ளவர்கள், இங்கே உண்மையிலேயே 'இந்தியன்' இல்லை, என்பதை உணர்ந்தால், வீண்கோபம் நீங்கப்பெற்று விவேகம் பெறுவர். அது அவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது. நிக்கோலஸ், இவ்வளவு நிந்தனைக்கு ஆளானதற்கு மற்றோர் முக்கியமான காரணம், தேசியத் தலைவர்களும் தாசர்களும் சேர்ந்து,எந்த விடுதலை வீரனைப்பற்றி,உரிமைப்போர்த் தளபதியைப்பற்றித், தவறானகருத்தைப் பரப்பி வைத்தார்களோ,அந்த டாக்டர் அம்பேத்காரை, இவர்புகழ்ந்துவிட்டார்! எப்படி இருக்கும் அந்தப்பேச்சு! காதில் வீழ்ந்ததும் காந்தீயர்களுக்கு உள்ளம் பற்றி எரியத்தொடங்கிவிட்டது. உரையிலே, உண்மை உளதா என்பதை உணரும் நிலையையும் இழந்து உளறுகிறார்கள். டாக்டர் அம்பேத்கார், ஒரு 'மட்டமான' ஆள், பதவிப்பித்தர், ஜாதிவெறியர்,ஏகாதிபத்யதாசர், என்று, தேசியவாதிகள், தீட்டிவைத்திருக்கிறார்கள், அந்தகைய திருமுகங்களையே, மேனாட்டினர், அதிலும் குறிப்பாக, ஆளும் வர்க்கத்தினர், படித்திருக்கின்றனர். அப்படித் தூற்றலுக்கு ஆளான டாக்டர்அம்பேத்காரைக் கண்டு பேசியபின்னர், நிக்கோலஸ்,டாக்டரின் நற்பண்புகளைத் தீட்டினார். இது கண்டதும், சரியானபடப்பிடிப்புக்கிடைத்துவிட்டதே,இனிஅம்பேத்காரின் அறிவாற்றலை அனைவரும் அறிந்துகொள்ள நேரிடுமே, அம்மட்டோடின்றி, துவேஷத்தினால் நாம் அவரைத் தூற்றினோம் என்பதும் தெரிந்துவிடுமே, ஆகவே நிக்கோலசின் தீட்டுகோல் காட்டிடும் டாக்டரைக்கண்டால், அவருடைய மேன்மையும் நமது ஈனத்தனமும் ஒரே சமயத்திலே விளங்கிவிடுமே, என் செய்வது, என்று கலங்கிய காந்தீயர்கள், இக்கஷ்டத்திலிருந்து நீங்க ஒரு சூட்சமம் கண்டுபிடித்தனர். டாக்டரின் பெருமையும், தமது சிறுமையும்,வெளிவராதிருக்கஒரே வழி, இவைகளை வெளிப்படுத்திய நிக்கோலஸை, ஒரே அடியாகத் திட்டிவிடுவது! இந்தச் சூட்சமத்தோடுதான், சுடச்சுட நிக்கோலசின்மீது, வசைக்கணைகளை வீசினர், தேசியவாதிகள்.

"செட்டியாரே! என்னய்யா இது, அந்தப் பலசரக்குக்கடையிலே பாக்கு நன்றாயிராது என்று சொன்னீரே. பாக்கு, முதல்தரமாக இருக்கிறதாமே" என்று, வாடிக்கைக்காரர், வேறோர் கடைக்காரரின் சரக்கு நன்றாக இருக்கிறது என்று கூறக்கேட்டால், வாடிக்கைக்காரர்,அந்த வேறோர் கடைக்குப்போய் விட்டால் என்னசெய்வது என்று பயந்த செட்டியார், என்ன செய்கிறார்.?

"யாரய்யா சொன்னது அந்தக்கடையிலே பாக்கு நன்றாகஇருப்பதாக"என்று செட்டியார் கேட்பார்.

"செட்டியாரே! எங்கள் எதிர்வீட்டுக்காரர் இருக்கிறாரே,ஏகாம்பரமுதலியார், அவர்தான் சொன்னார். அவர் போயிருந்தாராம், அந்தக் கடைக்கு, சரக்கைப் பார்த்தாராம். முதல்தரமாக இருக்கிறதாம்" என்று வாடிக்கைக்காரர் சொல்வார். உடனே செட்டியார்,ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டு, "ஏகாம்பரமாசொன்னது! சரிதான்! அந்த ஆள்தானே சொன்னான்! ரொம்பச்சரி" என்று கூறுவார்.

என்னய்யா! ஏன் சிரிக்கிறீர்?" என்று வாடிக்கைக்காரர்கேட்பார்.செட்டியார், வாடிக்கைக்காரரை வலையிலே வீழ்த்திவிட்டோம் என்ற சந்தோஷத்துடன், "அந்த ஏகாம்பரத்தின் பேச்சைக்கேட்டு ஏமாறாதே. அவன் அண்டப்புளுகன்.சுத்த அபத்தம் பேசுபவன். அந்தப் பலசரக்குக் கடைக்காரனிடம் பணம்வாங்கிக்கொண்டுபேசுகிறான்" என்று கூறுவார்.உடனே வாடிக்கைக்காரர், செட்டியார் கடையிலேயே, பாக்கு அரைவீசை கொடுக்கச் சொல்லி வாங்கிப்போவார்.

இதுபோலத்தான், எந்த டாக்டர்அம்பேத்காரை, இவர்கள் இழித்தும் பழித்தும் பேசினார்களோ, அதே அம்பேத்காரை, நிக்கோலஸ், நாட்டினர் காணும்படி, நற்பண்புகள்தெரியஓர் ஓவியம்தீட்டியதும்,தேசியச்செட்டியார்கள், நிக்கோலஸைஒரே அடியாகத் தூற்றுவதன் மூலம், டாக்டர் அம்பேத்காரின் நற்குணங்களை நாட்டினர் தெரிந்துகொள்ள முடியாதபடி செய்துவிடலாம், என்று சூது செய்கின்றனர்.

தேசீய இயக்கத்தைச் சார்ந்தவர்கள், டாக்டர் அம்பேத்காரைத்தூற்றிப்பேசியதைக்கேட்டிருக்கிறோம், எழுதியதைப் படித்திருக்கிறோம். டாக்டர் அம்பேத்கார், எப்படிப்பட்டவர் என்று நிக்கோலஸ் கண்டறிந்தார் என்பதைப் பார்ப்போம்.

"யார் தெரியுமா டாக்டர் அம்பேத்கார்? 18 கோடி இந்துக்களின் கண்களிலே, அவர் ஓர் தீண்டப்படாதவர்!—" என்று கூறுகிறார், நிக்கோலஸ்.உண்மையா, அல்லவா அது? இந்துக்களின்நினைப்பு என்ன? நினைப்புக்கிடக்கட்டும், நிலைமை ஓரளவு, சிறிதளவு அந்த நினைப்பை மாற்றக்கூடும். இந்துக்களின் புண்ய ஏடுகள், எந்தநினைப்பைத்தரும்? டாக்டர் அம்பேத்கார் ஓர் ஆதித்திராவிடர், ஆதித்திராவிடர்கள், தீண்டாத ஜாதியினர், என்றுதானே சாத்திரம் சாற்றுகிறது. இல்லையா? தீண்டாத சாதி என்ற நாசுக்குமொழிகூடக் கொஞ்ச நாட்களுக்கு முன்பு ஏற்பட்டது. இந்துக்களின் பழைய அகராதிப்படிப் பேசுவதானால், டாக்டர் அம்பேத்கார், ஒருசண்டாளர்! லண்டன் சர்வகலாசாலையினர் அவரை ஒரு M. A, வாக்கினர், கொலம்பியா பல்கலைக்கழகத்தினர் அவருக்குச்சிறப்புப்பட்டங்களை வழங்கினர், ஆனால் அவருக்கு இங்கே, இந்துக்கள், சனாதனச் சர்வகலாசாலையினர் சூட்டும் பட்டம், சண்டாளர்! என்பது, நெஞ்சுவேகாதா, இதைச்சிந்திப்பவருக்கு!

"பழைய விஷயமல்லய்யா, கட்டுக்கதையல்ல, புராணமல்ல, 1944ம் ஆண்டு விஷயம் நான் சொல்வது" என்று நிக்கோலஸ் கூறுகிறார். ஏன்? மனிதனை மனிதன் தொட்டால் தீட்டு என்றதத்துவத்தைக், காட்டுமிராண்டிக் காலத்திலே இந்தியாவிலே கொண்டிருந்தனர்போலும், என்றே வெளிநாட்டார்கருதுவார்கள். அறிவு ஆட்சி செய்யும்இந்தக்காலத்திலே, "தீண்டாமை" எனும் கொடுமை இந்தியாவிலே இருக்கிறது என்று கூறினால் நம்பவும் மாட்டார்கள், என்றுஎண்ணித்தான், நிக்கோலஸ், கூறுகிறார், இக்கொடுமை இன்றும் இருக்கிறது என்று. வெளிநாட்டவர் கூறுவது கிடக்கட்டும், இங்குள்ளவர்களே கூறட்டடும், நிலைமை வேறு எப்படி இருக்கிறது?தீண்டாதார் என்ற நிலைமை போய்விட்டதா? லண்டன், கொலம்பியா, முதலியஎங்குசென்று, என்னென்ன பட்டம் பெற்றாலும், எத்தகைய பதவிகள் பெற்றாலும் டாக்டர் அம்பேத்காரை, எந்த ஜாதி என்று இந்துக்கள் கூறுகின்றனர். நெஞ்சில்கைவைத்து, நேர்மையை மதித்துப் பதிலுரைக்கட்டும், இந்த நிலைமைஇன்றுவரை இருப்பது தகுமா? நிக்கோலஸ் போன்றவர்களுக்கு, இந்தியாவிலே, இந்துமார்க்கத்தவர்களிலே ஒருபகுதியினர் என்று குறிக்கப்படும், 6 கோடிக்குமேற்பட்ட மக்களை, அதே இந்துமார்க்கத்திலேயே உள்ள மற்றோர் கூட்டம் தொடுவதே தோஷம் என்று எண்ணுவதும், இந்த ஈனத்தனமான எண்ணத்துக்கு, ரிஷிசிரேஷ்டர்களின் ஏடுகளை ஆதார

(4-ம் பக்கம் பார்க்க)

## நிகோலாஸ்

3-ம் பக்கத் தொடர்ச்சி

மாகக் கொள்வதும்,மனிதாபிமானமற்ற இச்செயலை, 'சதாசாரம்' என்றும், சுதர்மம் என்றும், அயன் ஆணை என்றும், கூறிப்பெருமை அடைவதும், உண்மையிலேயே, ஆச்சரியத்தைத்தானே தரும். ஒருகூட்டம் மற்றோர் கூட்டத்தைப்,பிறவியின் காரணமாகவே பேதமாகக்கருதி, இழிவாக நடத்துவதைக்கண்டே நிக்கோலசுக்குக் கோபம் பிறந்தது. இது என்ன விந்தையான மதம், ஒருபகுதியைப்பூதேவராக்கி வேறோர் பகுதியைச்சண்டாளராக்கிக் காட்டுகிறதே, என்று திகிலும் அடைந்திருப்பார், ஆனால், இந்த மனப்பான்மையின் பயனாக, நாட்டிலே அவ்வப்போது நடந்துவரும் அநாகரிகங்களை, அக்ரமங்களை, மிருகச் செயல்களையும் காணநேரிட்டால், நிக்கோலாஸ், ஒரு புத்தகமல்ல, ஆயுட்காலமெல்லாம், எழுதிக்கொண்டிருக்கலாம், இந்த அநீதியைக்குறித்து.

தீண்டாதாரின் வாழ்க்கையை இதோ படம் பிடித்திருக்கிறார் பாருங்கள்.

தீண்டாரின் வாழ்க்கை எப்படி இருக்கிறது? சர்வம் 'இல்லை' மயமாக இருக்கிறது. பொதுக்கிணறுகளை அவர்கள் உபயோகிப்பதில்லை! எந்த அழுக்குநீர் கிடைக்கிறதோ அதைப்பருக வேண்டியதுதான்.

ஆதித் திராவிடப்பிள்ளைகள் பள்ளிக்கூடங்களிலே நுழைய முடியாது—நுழைந்தாலும் வெளியே உட்காரவேண்டும்.

குளங்களிலே குளிக்கக்கூடாது, ஆகவே அவர்கள் அழுக்குப்படிந்து காணப்படநேரிடுகிறது. கோயில்கள் மூடப்பட்டுள்ளன, சில இடங்களிலே, கோயில்களைத்திறந்தனர், உடனே வைதீகக்கும்பல், கோயிலையே "சண்டாள" த்வம் பெற்றதெனக்கூறி விட்டது!

இவர்கள் மலம்கூட்டுகிறார்கள்! கூடைகளிலே, மலத்தைக் கொட்டிச் சுமந்து செல்கிறார்கள்.

என்னசெய்வது! அது அவர்களுடைய பூர்வீக கர்மானுசாரமாக ஏற்பட்டது என்று இந்துக்கள் கூறுகின்றனர். சௌகரியமான சித்தாந்தம்—உயரிடத்திலே உதித்தவர்களுக்கு!

இதைக்கூறிவிட்டு நிக்கோலாஸ்முடித்துவிடவில்லை. சிலகாட்சிகளையே தீட்டிக் காட்டுகிறார். இதோ ஒருகாட்சி.

இடம்; ஒருபங்களா. சாப்பாடுமுடித்துவிட்டு, உட்கார்ந்தோம். ஒருபிரிட்டிஷ் ராணுவஅதிகாரியும்வந்துசேர்ந்தார். என்ஜினியர்கள் பயிற்சிபெற இந்தியர்களைத் திரட்டுபவர் அவர். அன்று கவலையுடனும் சோர்வுற்றும் காணப்பட்டார்.

"ரொம்ப அலுப்பா இன்று?"

"சரியானசிக்கல்!" என்று கூறிவிட்டு நாற்காலியிலே சாய்ந்தபடி, "ஆள்சேர்ப்பதிலே தொல்லைவந்துவிட்டது" என்று கூறினார்.

"ஆட்கள்கிடைக்கவில்லையோ, போதுமானபடி"

"ஓ! போதுமான ஆட்கள் வருகிறார்கள். ஆனால் அவர்களை நான் திருப்பி அனுப்பிவிடுகிறேன். அதோ அங்கேபார்"

இரண்டுபேர்நிற்கின்றனர். கட்டுமஸ்தான உடல், நல்லஉடை.

"அந்தஆசாமிகளைப்பார்த்தாயா? இதுவரை வந்தவர்களிலே, உடல் அமைப்பும் உள்ளப்பண்பும் விசேஷமாகக்கொண்டவர்கள் இவர்கள், அவர்கள் சேரவிரும்புகிறார்கள். எனக்கு அவர்களைச்சேர்த்துக் கொள்ளவிருப்பமே. ஆனால் சேர்த்துக் கொள்ளமுடியவில்லை."

"ஏன் அப்படி?"

"தீண்டாதவர்கள்!"

"இது என்ன மகாமோசம்!"

"தடைஇல்லாமல்! ஆனால் இது இந்தியாவாயிற்றே! இவர்களைச்சேர்த்துக் கொண்டால்,தீர்ந்தது, என்னிடம்உள்ள ஆட்கள், வேலையைவிட்டுவிட்டுப்போய் விடுவார்களே!"

"அவர்களின் மேலதிகாரியல்லவோநீ. நீ கட்டளையிடலாமே."

"முடியாது! அவர்கள் வரப்போகிறார்கள் என்ற வதந்திவந்ததும், இங்கே ஒரே அமர்க்களமாகிவிட்டது. விலகிவிடுதல், கெர்வமாக நடப்பது! எதிர்த்துப்பேசுவது, இப்படிநடந்தன.சரி, என்றுஇணங்கினேன்.மற்றோர்சிப்பாய்க்கலகம்துவக்க நான் விரும்பவில்லை"

"இதுபோன்ற காட்சிகளைத்தீட்டுகிறார் நிக்கோலஸ். இவ்வண்ணம், உயர்ஜாதி இந்துக்களின் கொடுமைக்கு ஆளாகித்தவிக்கும் பழங்குடிமக்களின் பரிதாபநிலையைமாற்றி, அவர்கள் மனிதஉரிமை பெற்றுவாழ மார்க்கம் காண்பதையே மகத்தான சேவை என்றுகருதும்மாவீரர் டாக்டர் அம்பேத்கார். குகைக்குள்ளே சீறிக்கொண்டிருக்கிறது புலி, பசியுடன் வாலைச்சுழற்றிப்பூமியிலே அடிக்கிறது, பற்களை நறநறவெனக்கடிக்கிறது. அது தெரியாமல், குகைக்குள்ளே சென்று, தங்கிச்சுகம்பெறலாம் என்று எண்ணிக்கொண்டு, செல்கிறது யானைக்கூட்டம்! அதைத்தடுத்துப்பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச்செல்லவேண்டும். முடியுமானால், குகைக்குள்ளிருந்தே புலியுடன் மல்யுத்தம்செய்து அதனைக்கொல்லவேண்டும்,ஆயுதமில்லை, ஆபத்துஅதிகம்! புலிக்கு இரைகிடைக்காதபடிசெய்து, அதனைப் பட்டினிபோட்டுச்சாகடிக்கலாம், அது தந்திரமான திட்டம். குகையைவிட்டு வெளிக்கிளம்பி, புலி இரைதேடுவதைத் தடுக்க, அந்தக்குகையின் வாயலைஅடைத்துவிடலாம். இங்ஙனம், ஏதேனும் ஒருமுறை தேவை, எப்படியேனும், புலியால் நேரிடக்கூடிய பேராபத்திலிருந்து, தப்பவேண்டும். குகைதான் இந்துமதம்! புலிதான், ஆரியக்குரு! டாக்டர் அம்பேத்கார், அந்தப்புலியுடன் போரிடும் வீரன்! அவரை நிக்கோலாஸ் புகழ்ந்துரைத்தால், பூசுரக்கூட்டம் பொறுத்துக்கொள்ளுமா! பிடிசாபம்! என்றுமிரட்டுகின்றன, துரைமகனை நோக்கி.

இந்துக்களிலேஉயர்ஜாதிஎன்றுகூறிக் கொள்ளும் கூட்டத்தினர், ஆதித்திராவிடர் விஷயமாகநடந்துகொள்ளும் அக்ரமத்தை இவர்மட்டுமல்ல, வேறுபலரும் கண்டித்துள்ளனர். காந்தியார்கூடத் தீண்டாமைபோகவேண்டும் என்றுகூறிடும் வரையிலே, முற்போக்குள்ளவராகத்தான் இருக்கிறார். சுவாமி விவேகானந்தர் போன்ற மதசீர்திருத்தவாதிகளும், தீண்டாமைபோகவேண்டுவதன் அவசியத்தை வலியுறுத்திக்கூறினர். அவர்கள் கூறினர், டாக்டர் அம்பேத்கார், போரிடுகிறார்! வாயுரையாளர்களை, வேதாந்திஎன்றும், மதரட்சகரென்றும், அவதாரமென்றும் புகழ்கிறார்கள். ஆனால், சொல்லளவிலே நில்லாதே, சோர்வின்றிப்போரிடு, அக்ரமத்தைவிரட்டு, அநீதியை அழித்தொழி என்று அஞ்சாதுகூறிச் சீறிப்போரிடும் வீரர் டாக்டர் அம்பேத்காரை, சுயராஜ்ய வைரிஎன்று தூற்றுகின்றனர்.

1933ம் ஆண்டிலே, பண்டிதர் மாளவியா, எல்லைப்புறத்திலே நடைபெற்ற ஒரு விருந்தின்போது, பழத்தைக்கூடத் தொடவில்லைப்பயந்துகொண்டு! குலாசாரம்கெட்டுவிடும் என்று அவர் அஞ்சினார், விருந்துவைத்தவர், பிராமணரல்ல, எனவே அந்தவிருந்திலே கலந்துகொள்வது, மாளவியாமனதுக்கு அருவருப்பாக இருந்தது. இந்தச்சம்பவத்தை நிக்கோலஸ்கூறிவிட்டு, இதுபோல ஜாதிவெறி, இருக்கலாமாஎன்று கேட்கிறார். தவறா? நாகரிக நோக்கமுள்ள யார்தான் கேட்க மாட்டார்கள்! இந்துக்களின் மனப்பான்மையின்படி, மேனாட்டிலே ஒருவிருந்து நடப்பதாகக்கொள்வோம். எப்படிஇருக்கும் அதன்இலட்சணம்!—என்ற ஒருகற்பனைக்கேள்வியைக்கிளப்புகிறார் பீவர்லி. அதையொட்டி ஒருகற்பனைச் சித்திரமும் தீட்டுகிறார்.

சர்ச்சில், ரூஸ்வெல்ட், ஸ்டாலின், சியாங்கேஷேக், ஆகியோர்கூடி ஓர் மாநாடு நடத்துகிறார்கள்என்று வைத்துக்கொள்வோம், இந்துவைதிகமுறைப்படி என்னநடைபெறும்? ரூஸ்வெல்ட் தொட்டுஎழுதியபேனாவினால், சர்ச்சிலும் கையொப்பம் தீட்டிவிடுவார், உடனே ஓடுவார் ஸ்நானம்செய்ய—தீட்டாகிவிட்

(9-ம் பக்கம் பார்க்க)

# அறியாமையின் உச்ச நிலை

—(நக்கீரன்)—

"ஒருவனுடைய உடல்அமைப்புமுறையை நீங்கள் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். அந்த உடலின் தட்ப—வெப்பங்கள் எந்த அளவில் அமைந்துள்ளனவென்பதையும் அறிந்துகொள்ள வேண்டும். அவனுடைய உடல் அமைப்புக்குத் தக்கவாறு உணவுகளை உட்கொள்ளுகின்ருனு என்பதை அறிந்து கொள்வதும் இன்றியமையாததாகும். அதன் பின்னர், அவனுக்கு ஏற்பட்ட நோய்க்குக்காரணம் யாதாய் இருக்கலாம் என்பதை,

"நோய்நாடி நோய் முதல் நாடி
அது தணிக்கும், வாய்நாடி
வாய்ப்பச் செயல்"

என்றுவள்ளுவர்கூறியபடி ஆராய்ந்து, அந்நோய் தணிவதற்குரியமுறையில், அதற்கு ஏற்ற மருந்தைக் கொடுப்பதையே. எதிர்கால வழக்கறிஞர்களாக வரப்போகும் சட்டக்கல்லூரி மாணவர்களாகிய நீங்கள் முதலில் கற்றுக்கொள்ள வேண்டும். அதன் பின்னர் படிப்படியாக அறுத்தல் (Operation) முதலான மற்றைய நோய்களைப்பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும். இதுவே மருத்துவத்தைப்பற்றிய எனது முதல்சொற்பொழிவா (Lecture)கும்," என்று, சட்டங்களைக்கற்று வழக்கறிஞர்களாகவுரவிருக்கும் மாணவர்கட்குப் பயிற்சி அளிக்கும்படி அமர்த்தப்பட்ட ஒரு மருத்துவவல்லுநர் (Doctor) பாடம்கற்றுக்கொடுக்கிருர்.

இதென்னய்யா, விந்தையாக இருக்கிறதே! சட்டக்கல்வி பயிலும் மாணவர்கட்கு, ஒரு மருத்துவர் (Doctor) ஆசிரியரா? உலகப்புதுமைகளில் இதுவும் ஒன்ருக இருக்கலாம்போல் தெரிகிறதே! இதென்ன? வேடிக்கையா? விந்தையா? வெறியாட்டமா? என்று என்னைக்கேட்டால் நான் என்ன சொல்ல முடியும்? ஆனல் ஒன்றுமட்டும் கூறுவேன். சட்டக்கல்லூரியில் பயிலும் மாணவர்கட்குப் பயிற்சி அளிக்கும் ஆசிரியர் ஒரு சட்ட நிபுணராயன்றே இருத்தல் வேண்டும் என்பதனை அறிந்து, அக்கல்லூரிஅமைப்பாளர்கள், அத்துறையில் தேர்ச்சிபெற்ற ஒருவரை அமர்த்தி யிருக்க வேண்டும். ஆனல் அவர்கள் அங்ஙனம்செய்யவில்லை. சட்ட நிபுணருக்குப் பதிலாக் ஒருமருத்துவ நிபுணரைக் கொண்டுவந்துஅமர்த்தி விட்டனர். அங்ஙனம் அமர்த்தப்பட்ட மருத்துவராவது, 'நான் ஒரு மருத்துவனுயிற்றே, எனக்குச் சட்டத்தைப்பற்றி என்ன தெரியும்? என்றுகூறி மறுக்காது அப்பதவியைஏற்றுக்கொண்டு,'எதிர்கால வழக்கறிஞர்களாக வரப்போகும் சட்டக்கல்லூரி மாணவர்களாகிய நீங்கள், மருத்துவத்தைப்பற்றிய எனது முதற்சொற்பொழிவைக் கேளுங்கள்' என்று பாடங்கற்றுக்கொடுக்கிருர். சட்டக்கல்வி பயிலும் மாணவர்கட்கு மருத்துவ முறைபற்றிய பாடம் கற்றுக்கொடுப்பதா என்ற எண்ணம் அந்த ஆசிரியருக்கு உண்டாகவும் இல்லை. மாணவர்களாவது, என்னய்யா! சட்டம் பயில வந்துள்ள எங்கட்கு மருத்துவ முறையைப்பற்றி முழங்குகிறீரே, நீர் ஒரு மருத்துவரா? அல்லதுசட்ட நிபுணரா என்று கேட்கவும் இல்லை.

இதுபோன்ற நிகழ்ச்சி ஒன்று அண்மையில்நம் நாட்டில்நடந்திருக்கிறதென்று நான் சொன்னல் நீங்கள் வியப்படைவீர்கள். ஆனல் உண்மை. இப்படியேதான் நடந்திருக்கிறது. இதோ அந்நிகழ்ச்சி.

"சமஸ்கிருத மொழி கற்கிறவர்களை எல்லாம் ஆரியர்கள்என்றுகூறமுடியாது. பழைய காலத்தில் சமஸ்கிருதம் தான் பொது மொழியாக இருந்திருக்கலாம், எல்லோரும் அம்மொழியிலேயே எழுதினர்கள்." என்று கூறுகிருர் ஒருவர். அவர்யார்? எங்கே? எப்பொழுது? எதற்காகக்கூறினர்? என்றுகேட்கிறீர்கள். அதையும் கூறிவிடுகிறேன்.

28—2—45-ல், திருப்பதிக்கீழ்த்திசைக் கல்லூரியில் அமைக்கப்பெற்றுள்ள "இராமலிங்கம் தமிழ்மாணவர் கழக"த்தின் ஐந்தாவது ஆண்டுநிறைவு விழாவுக்குத் தலைமைவகித்துச் சொற்பொழிவாற்றிய கோவைத் தோழர் T.A.இராமலிங்கஞ்செட்டியார், M.L.C. தான், நான்மேலே தீட்டியுள்ள சொற்ருெடர்களைச் சற்றேனும் முன்பின் ஆய்வின்றி அள்ளி வீசியிருக்கிருர்.

திருப்பதியிலுள்ள கீழ்த்திசைக் கல்லூரியில், ஒரு தமிழ்மாணவர்கழகம் எந்த நோக்கத்தோடு அமைக்கப்பட்டிருக்கும் என்பதை அறிய எவரும் ஆவல் கொள்ள மாட்டார்கள் என்பது எனது துணிபு. தமிழ்மாணவர்களால் அமைக்கப்படும் ஒரு கழகம், தமிழைப் பற்றியதாகவும், தமிழ்மொழியை அடிப்படையாகவுள்ள பல துறைகளிலும், அதனை அமைத்தவர்கள் அறிவுவளர்ச்சி அடைந்து பயன் பெறவேண்டும் என்றநோக்கத்தையே கொண்டவர்களாகவும் இருப்பார்கள் என்பது எவருக்கும் தெரியக்கூடியதாதலால் என்க.

ஆனல், இத்தகைய சிறந்த நோக்கத்தோடு அமைக்கப்பெற்றுள்ள ஒருகழகத்திற்குத் தலைமைவகிக்கச் சென்ற ஒருவர், அக்கழக அமைப்பாளர்களான மாணவர்கட்கு என்ன அறிவுரை புகட்டினர்? சட்டக்கல்லூரி மாணவர்கட்கு, மருத்துவமுறை பற்றிய விளக்கம் கூறிய ஆசிரியரைப்போலத், தமிழ்க்கழக மாணவர்கட்குச்சமஸ்கிருதத்தின்பெருமையையும்அதனைக்கற்பதன் இன்றியமையாமையையும் எடுத்துக்கூறியிருக்கிருர் 'விதையொன்று போட்டால் சுரையொன்றுமுளைக்காது' என்பது நம்நாட்டுப் பழமொழிகளில் ஒன்று. ஆனல், இங்கே—நம்நாட்டில் மட்டும்—அப்படித்தான்—புளியம்விதைபோட்டால் அந்தவிதை மாமரமாகமுளைக்கிறதென்று, திருப்பதித்தமிழ்மாணவர் கழக ஆண்டுவிழா நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகிறது. தமிழ்மக்களின், மொழி—கலை—நாகரிகம் ஆகியவற்றைக்கண்டு, அவற்றைத்தாம் நுகரவும், மற்றையோர் நுகரும்படி செய்யவும் வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடுபோடப்பட்டதமிழ்மாணவர்கழகம் என்னும் தமிழ் வித்தானது, ஆரியமக்களின், மொழி, கலை, நாகரிகம் ஆகியவற்றைத் தரும் தருவாக முளைக்கும்படியான முயற்சியைத்தோழர் இராமலிங்கம் கையாண்டிருக்கிருர். தமிழ் மாணவர் கழகத்தைச் சமஸ்கிருத மாணவர்கழகமாக மாற்றிய அந்தமனிதரைப் பற்றி அக்கழக மாணவர்கள் என்னமுடிவுக்குவந்தார்கள் என்பது இன்னும்நமக்குச்சரியாகத்தெரியவில்லை. இராமலிங்கனர் கையாண்ட முறையை நோக்கும்போது, சட்டக்கல்லூரியில் மருத்துவ முறையைக்கற்பித்த ஆசிரியரோடுகூட இவரைஒப்பிடமுடியாமல் இருக்கிறது. எப்படியென்றல், சட்டக் கல்லூரியில் மருத்துவம்பேசியவருக்கு இடமாற்றம் ஏற்பட்டதேயொழியத், தாம் பேசிய பொருள்பற்றியதுறையில் அறிவுமாற்றம் ஏற்படவில்லை. அவர்சட்டக் கல்லூரியில் மருத்துவத்தைப்பற்றிப் பேசியபோதிலும்,மருத்துவம்பற்றியமுறைகளை ஒழுங்காகவே பேசியிருக்கிருர்.

ஆனல், தமிழ்மாணவர் கழகத்தில், சமஸ்கிருதத்தைப்பற்றிப்பேசிய இராம

(7-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு.

காஞ்சி 25—3—45 ஞாயிறு


## பாகிஸ்தான் பரணி!

"பாகிஸ்தான் பெறுவதில் எந்த விதமான தியாகங்கள் செய்ய நேரிட்டாலும் அவற்றைச் செய்ய நாங்கள் தயாராய் இருக்கிறோம் என்ற உறுதிமொழியில் முஸ்லீம்களாகிய நீங்கள் ஒருவரும் தவறக்கூடரது" என்று அகில இந்திய முஸ்லீம்லீக் தலைவர் ஜனாப் ஜின்னா அவர்கள் தம்முடைய பாகிஸ்தான்நாள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில், எல்லைப்புற மாகாணத்திலுள்ள லீக்மந்திரிசபை காங்கிரஸ் மந்திரிசபையாக மாறியதைக் கண்டோ, அல்லது சிந்துமாகாணத்தில் லீக்மந்திரிசபையின்மெஜாரிட்டியைக் குறைத்துக் காங்கிரசுக்கு மெஜாரிட்டி உண்டாக்கமுயற்சிப்பதைக்கண்டோ, அல்லது அசாமில்கூட்டு மந்திரிசபையைஉண்டாக்க முயலுவதைக் கண்டோ ஜனாப் ஜின்னா பயந்து பணிந்துவிடுவார் என்று எண்ணியவர்களை, இந்த அறிக்கை விழிப்படைய வைத்திருக்கும் என்று நம்புகிறோம். பாகிஸ்தான் திட்டம்ஆரம்பிக்கப்பட்டு ஐந்தாண்டுகளாகின்றன. இவ்வைந்தாம் ஆண்டு நிறைவின் நினைவாகத் தமது இனமக்களுக்கு விடுதலை அளிக்கும் திட்டமான 'பாகிஸ்தானை' நினைவூட்டுவது அவருடைய கடமையாகும் என்ற முறையிலேயே இந்த அறிக்கை வெளியிடப்பட்டதாகும்.

காங்கிரஸ்காரர்களின்முழுப்பலம் பெற்ற மந்திரிசபைகள் ஏழுமாகாணங்களில் இருந்து ஆதிக்கம்செலுத்தியகாலத்தில்,எவராலும்அசைக்க முடியாதபடி வேரூன்றப்பட்ட பாகிஸ்தான் திட்டம், இந்தச்சிறிய சலசலப்பைக்கண்டு ஆட்டங் கொடுத்துவிடுமென்றோ அல்லது அதன் தலைவர்அஞ்சித் தமதுகொள்கையைமாற்றிக்கொள்வார்என்றோ யாராவது கருதுவார்களானால்அவர்கள் அரசியல் முறையை ஒருசிறிதும் அறியாதவர்கள் என்றே கருதப்படுவர்.

ஜனாப் ஜின்னா தமது அறிக்கையில்குறிப்பிடுகிறார்,'காங்கிரசுக்கோ அல்லதுசேவாக்கிரமத்திலுள்ளகாந்தியாருக்கோ கட்டுப்பட்டு, முஸ்லீம்கள் மெஜாரிட்டியாகவுள்ளஒரு மாகாணத்தில் மந்திரிசபைஏற்படுத்துவதைச் சிறிதளவுசுயமரியாதையுள்ள முஸ்லீமும் பொறுத்துக்கொள்ளமாட்டான்' என்று.இதன் பொருள் என்ன? முறையானதேர்தல்நடத்தினால், காங்கிரஸ் வேலை செய்தாலும், அல்லது காந்தியாரே நேரில்வந்துகேட்டுக்கொண்டாலும் அவர்கள் நிச்சயம் தோல்வியே அடைவார்கள் என்பதை ஜனாப் ஜின்னா தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார்.

நம்நாட்டிலுள்ள சிலரைப்போல ஜனாப் ஜின்னா இந்தச் சலசலப்புகளுக்கெல்லாம் அஞ்சுபவரல்ல. நம் நாட்டில் சிலதலைவர்கள்இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பேச்சுக்கு வரம்புகட்டிக்கொள்வதில்லை. அதனால் அவர்கட்கு எதிர்பாராததொல்லைகளும் சிலசமயங்களில் ஏற்பட்டுவிடுகின்றன.'நமக்குத்தலைவராகவரகூடியவர் அவர்தான்' என்றுயாரை மக்கள் பெரிதும் வரவேற்றுநம்பிக் கைகொண்டு இருந்தார்களோ, அவரு (சர் R. K. S.)க்கே திருச்சியில் நடந்த ஒரு கூட்டத்தில் அதே மக்களாலேயே கேள்விகள் கேட்கப்பட்டுக் கலவரம்கூட ஏற்பட்டுவிட்டதென அறிகிறோம். இதற்குக் காரணம் என்ன?ஒருகாலத்தில்நாட்டுப்பிரிவினையை ஆதரித்த அவர் (Sir R. K. S.) இன்றுஅதனைஎதிர்க்கிறார் என்பதுதான். ஆனால் பாகிஸ்தான் கோரும் ஜனாப் ஜின்னாவோ, திராவிடநாடு கோரும் பெரியார் இராமசாமியோ எவ்வளவு இடுக்கண்நேர்ந்தபோதிலும் தங்கள் கொள்கைகளினின்றும்ஒருசிறிதும் விலகமாட்டார்கள் என்பதுமட்டும் உறுதி. அவர்களின் இலட்சியமான இனஅரசு,அவர்கள்காலத்திலேயே அமைக்கப்படுவதை நாம் காண்போம்.

---

## அறியாமையின்

7-ம் பக்கத் தொடர்ச்சி

என்பது, தோழர் இராமலிங்கனாரால் இப்போது தருவிக்கண்டுபிடித்தஆராய்ச்சியாகும்.

ஆரியர்கள் மத்திய ஆசியாவிலிருந்து இங்கு வந்து குடியேறியவர்கள் என்ற மறுக்கமுடியாத உண்மை, எத்தனையோ நூற்றுக்கணக்கான ஆராய்ச்சியாளர்களால் முடிவுகட்டி உறுதிப்படுத்தப்பட்டு, அந்த உண்மையை எக்காரணம் காட்டியும் மறுக்க முடியாத நிலைமை ஏற்பட்ட இன்றைய நிலையில்,எங்கோ இடுக்கிலும் மூடுக்கிலும் எடுப்பார் கைப்பிள்ளையாய் இருந்து ஏவல் செய்யும் ஒருவர் மறுத்துப் பேசுவதென்றால், நான் மேலே எடுத்துக்கூறியபடி, இந்நாட்டின் பழங்குடி மக்களாகிய திராவிடர்களை ஆரியர்களாக்கித்—திராவிட நூல்களைச் சமஸ்கிருத நூல்களாக்கி, அவர்களேமத்திய ஆசியாவில் இருந்துவந்து இங்கு குடியேறினவர்கள் என்று குட்டிக்கரணம் போட்டால் அதில் என்ன வியப்பிருகக முடியும்? ஆனால், இத்தகையினர் இவ்வாறெல்லாம் பேசுவதால் உண்மை மறைந்துவிடும் என்ற அச்சம் எமக்கு இல்லை, என்ற போதிலும், பொறுப்பு வாய்ந்த இடங்களில் ஏற்படும் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கும் பேற்றை இத்தகைய அறியாமையின் உச்சநிலையை அடைந்தவர்களுக்கு ஆராய்ச்சிக் காலமாகிய இந்நாளிலும் இந்நாடு இடமளிக்கிறதே என்றுதான்வருந்தவேண்டியிருக்கிறது. அறியாமையின் உச்ச நிலையை அடைந்தவனன்றி வேறுஎவனாவது, சமஸ்கிருதம் ஒருகாலத்தில்இந்நாட்டின் பொதுமொழியாக இருந்ததென்றும், சமஸ்கிருதத்திலேயே எல்லோரும் எழுதினர் என்றும், ஆரியர்களை எங்கிருந்தோ இங்கு வந்தவர்கள் என்று கூறுவது தவறு என்றும் பேசமுன்வருவானா என்பதை ஆராய்ச்சி உணர்வோடு கூடிய வாசகர்களே முடிவுசெய்வதோடு, தமிழ்மொழி வளர்ச்சியுற்றுத்—தமிழ்க் கலை வளம் பெற்றுத்—தமிழர் நாகரிகம் சிறப்புற்றுத்—தமிழர் பண்பு பாதுகாக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு நிறுவப்பெற்ற ஒரு தமிழ் மாணவர்கழகத்தில், சமஸ்கிருதத்தின் உயர்வையும் பெருமையையும் பற்றிப்புகழ்ந்து பேசிய ஒருவரை, அறியாமையின் உச்சநிலையை அடைந்தவர் என்று அழையாது வேறென்ன பெயர் சொல்லி அழைப்பதென்றுங் கேட்கிறேன்.

---

## இளங்கோ மன்றம்

### சிதம்பரம்

இந்நகர் உயர் நிலைப்பள்ளி நடுமன்றத்தில் 10—3—45மாலை 6 மணிக்குமன்ற மாணவர்களின் பேச்சுப்போட்டி, பட்டதாரிகளான தோழர்கள். ஜி. கல்யாணராமன், ஆர். நடராசன், கே. அன்பழகன் ஆகியோர் நடுவினராகஅமையப்,புத்தலக அமைப்புக்கான அரிய தலைப்புகள் தரப்பட்டு 15 மாணவர்கள்வரை போட்டியில் கலந்துகொண்டனர். முதல் இரண்டாவது பரிசுக்குரியவர்பெயர்களைவிளம்பித்தலைவர் முடிவுரை கூறியபின் மன்றத்தலைவர். நன்றிகூற இரவு 9 மணிக்கு இனிது முடிந்தது.

---

## அறியாமையின்

5-ம் பக்கத் தொடர்ச்சி

லிங்கனார், சமஸ்கிருதத்தைப்பற்றியே ஒன்றும்தெரியாத இடுப்பொடிந்த அறிவாளியர்க்கக்காணப்படுகிறார். அவர் கூறுகிறார், பழைய காலத்தில் சமஸ்கிருதம் தான்பொதுமொழியாகஇருந்ததென்று. பழையகாலத்தில் சமஸ்கிருதம் பொதுமொழியாக இருந்ததென்று கூறுவதற்கும், பழையகாலத்தில் கோழிப் பால் கொண்டு குதிரைக்கொம்புகழுவப்பட்டதென்பதற்கும் யாதொரு வேறுபாடும் இல்லை.

ஆரியர்களால் வழங்கப்படும் சமஸ்கிருதம்என்னும்மொழியானது, எழுத்துவடிவில் மட்டுமே இருந்ததென்றும், அதனைப்பேச்சுவடிவில் கொண்டு வருவதற்காகப்பலசமஸ்கிருதப் பண்டிதர்கள் முயற்சிசெய்துபார்த்தும் அதுசரியான பயனை அளிக்கவில்லை என்றும், இதற்காகவேண்டிய பலதிருத்தங்கள்பலதடவைகளில் செய்யப்பட்டனவென்றும், இதனாலேயே, 'சமஸ்கிருதம்'என்றசொல்லுக்கே 'திருத்தம்செய்யப்பட்ட மொழி' என்ற பெயர் வழங்கப்பட்டதென்றும், பின்னர் அதுபேச்சுவழக்கிற்கேதகுதியற்றதெனக்கண்டு, அதனைச் 'சேந்த மோழி' (Dead Language) என்று அழைத்தனர் என்றும் மொழி ஆராய்ச்சியாளர் பலர்கூறியிருக்கும் உண்மையையாவது இப்பொருள்பற்றிப்பேசவந்த தோழர் தெரிந்துகொள்ளாமல் வந்தாரே என்பதைக்கண்டு, அவரும் ஒரு தமிழரே என்பதற்காக அவர்பால் இரக்கங்கொள்ள வேண்டியிருக்கிறது.

சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட 'சுருதி' என்ற பகுதியில் வரும் நூல்கள் எல்லாம், ஒருவர்படிக்கும்பொழுது பிறரின்காதுகளுக்குமட்டும் கேட்கும், காதினால் கேட்ட அந்நூற்களின் கருத்தை மனதுள் இருத்தவோ, அல்லது தாம் கேட்ட கருத்துக்களை வேறு பிறர்க்கு எடுத்துச்சொல்லவோ முடியாது. காரணம்: 'சுருதி' என்றபகுதியில் வருபவை எல்லாம், சமஸ்கிருத எழுத்துக்களால் ஆக்கப்பட்ட ஒலி வடிவங்களேயன்றி, அவற்றுள் பொருட்செறிவோ அல்லது யாதாயினும் கருத்து விளக்கங்களோ இருப்பதற்கில்லை. உள்ளபடியே இவை எதாவதுஇருப்பின், அவற்றிற்குச் 'சுருதி' என்ற பெயர் எற்பட்டிருக்கக்காரணம் இல்லை. 'சுருதி' என்றசமஸ்கிருதச்சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல் 'காதினால் கேட்கப்படுவது' என்பதாகும். எந்தஒரு நூலும் எந்த ஒரு மொழியில்எழுதப்பட்டாலும், அந்த நூல் அந்தமொழி தெரிந்தவரால் படிக்கப்படுவதும் பலரால்கேட்கப்படுவதும்மாகத்தானே இருக்கமுடியும். இந்தநிலையில்'சுருதி' என்றபகுதிக்கு மட்டும் காதினாற்கேட்கப்படுவது என்ற நிலைஏற்படுவானேன். காதினாற்கேட்கப்படும்மற்றைய நூல்கள்எல்லாம்பிறருக்கும் எடுத்துக்கூறக்கூடிய முறையில்அவற்றின் பொருள்விளக்கங்கள் அமைந்திருப்பதனாலேயே, 'சுருதி'க்கு இந்தச் 'சிறப்பு'ப் பெயரை அக்காலத்திலேயே ஏற்படுத்தினார்கள்போலும்.

இதுபோலவே, சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட 'ஸ்மிருதி' என்றபகுதியில் வரும் நூல்கள் எல்லாம், படிப்பவர்களின் நினைவில் மட்டுமே இருக்கக்கூடியவை. 'சுருதி' யாவது, கருத்தற்றவெற்றொலியை வெளியே கிளப்புகின்றது. அதனை ஒருவர் படிக்கிறார், இன்னொருவர்கேட்கிறார். ஆனால், இவ் 'ஸ்மிருதி'க்கு அந்தத்தகுதிகூட இருப்பதாகத் தெரியவில்லை. 'ஸ்மிருதி' யைப் படிப்பவன், தான் படித்த 'ஸ்மிருதி'க்கருத்துக்களைத் தன் மனத்துள்ளேயேவைத்துக்கொள்ள வேண்டியவனாகின்றான். அதன்கண், அத்துணை அறிவுக்குப்புறம்பான— அருவருக்கத்தக்க செய்திகள் அந்நூற்களை ஆக்கிய ஆரிய முனிபுங்கவரால்நிரப்பிவைக்கப்பட்டிருக்கின்றனபோலும்! 'ஸ்மிருதி' என்ற சமஸ்கிருதச் சொல்லுக்குநேரானதமிழ்ச் சொல் 'நினைவில்வைக்கப்பட வேண்டியது'என்பதாகும். இத்தகையஅறியாமையும் அருவருப்பும்நிறைந்த கருத்துக்களைத் தம்மகத்தே கொண்டுள்ளதனாலேயே, வேதாகமசுருதி ஸ்மிருதிமுதலான நூல்களையும் சமஸ்கிருத மொழியையும் பார்ப்பனரல்லாத பிறர் படித்தலாகாதுஎன்ற சட்டத்தையும் அக்காலத்தில் ஏற்படுத்திவைத்தனர்போலும்! ஆங்கில மக்கள் இந்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வரை; இச்சட்டமும், இதனையொட்டிய உடன்கட்டை ஏறுதல்போன்ற சட்டங்களும் நடைமுறையில் இருந்துவந்தன வென்பதை எவரே மறுக்கமுடியும்! எனவே, சமஸ்கிருதத்தையோ அன்றி அம்மொழியிலுள்ள நூல்களையோ பார்ப்பனரல்லாதார் படித்தல் கூடாதென்றசட்டம் ஆங்கிலர் இந்நாட்டுக்கு வரும்வரை இருந்ததென்பது பெறப்படும் போது, பழைய காலத்தில் சமஸ்கிருதமே பொதுமொழியாக இருந்ததென்று கூறும் கோவைத் தோழரின் கூற்றை என்னென்பது? அறிந்த ஒரு உண்மையைக் கூடஅளந்து பேசுவது அறிஞர் இயல்பு. ஆனால், அறியாதும் அளவாதும் அள்ளித்தெளிக்கும் ஆணவநோய்க்கு இடும் மருந்து யாதுளது?

இனிச், சமஸ்கிருதம் பொதுமொழியாக இருந்தது என்பதோடு நின்றாரா இந்த அற்புத ஆராய்ச்சியாளர், இல்லை. "எல்லோரும் அம்மொழியிலேயேஎழுதினார்கள்" என்று, குப்பைமேட்டுக்குக் குங்குமப்பொட்டிட்டுக் காட்டுகிறார் கோவைத்தோழர்; எல்லோரும்சமஸ்கிருதத்திலேயே எழுதினார்கள் என்று இவர் யார் யாரைக்குறிப்பிடுகிறார் என்பதும் எமக்குத் தெரியவில்லை. 'எல்லோரும்' என்று குறிப்பிட்ட தோழர், எது—எது எவர்—எவரால், எந்தெந்தக்காலத்தில், அந்தச்சமஸ்கிருதமொழியில், இந்ததமிழ்நாட்டில் எழுதப்பட்டதென்பதையுங்குறிப்பிட்டிருந்தால்எவ்வளவோ உதவியாக இருக்கும். தொல்காப்பியர் சமஸ்கிருதத்தில் எழுதினாரா? திருவள்ளுவர் சமஸ்கிருதத்தில் எழுதினாரா? அல்லது சங்கப்புலவர்தான் சமஸ்கிருதத்தில் எழுதினார்களா? தொல்காப்பியமும், திருக்குறளும், சங்க இலக்கியங்களும் சமஸ்கிருதத்தில்தான் எழுதப்பட்டன என்பது ஒன்றுதான் இன்னும் கூறப்படாமல் எஞ்சிநிற்கிறது. இதனையும் யாராவது கூறிவிடுவார்களானால், போதும், அத்தோடுநிறுத்திவிடலாம் இந்த ஆரிய திராவிடப் போராட்டத்தை. தொல்காப்பியமும், திருகுறளும், சங்கஇலக்கியங்களும்சமஸ்கிருத நூல்கள் என்று முடிவுகட்டிவிட்டால், பின்னர், திராவிடர் எது? திராவிடம் எது? இவற்றிற்கான போராட்டந்தான் எது? ஒன்றுமே இருக்காதல்லவா? இந்நாட்டிலுள்ள எல்லா நூல்களும்சமஸ்கிருதமாக மாறும் போது, இங்குள்ள மக்களும் சமஸ்கிருதம் பேசும் மக்களாய்த்தானே இருக்கமுடியும்! அதாவது ஆரியர்களாய்த்தானே இருக்கமுடியும்!!

ஆனால், இங்குள்ளவர்கள், ஏதோ ஒரு மொழிபேசுகின்றார்களே, அதற்குப் பெயர் 'தமிழ்'என்றுசொல்லப்படுகிறதே, அதனைப்பேசுவோர் 'தமிழர்' என்றும் அழைக்கப்படுகின்றனரே, அவர்கள்யார்? என்று கேட்கிறீர்களா? அவர்கள்தான், மத்திய ஆசியாவிலிருந்து பஞ்சம்பிழைப்பதற்காக ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு வந்து, கங்கைக்கரையோரங்களில் குடியேறி, மெள்ள மெள்ள இங்கு முழுவதும் பரவினவர்கள்.

ஏது, இது ஒருபுது ஆராய்ச்சியாக இருக்கிறதே! தமிழர்கள் மத்தியஆசியாவில் இருந்து பஞ்சம் பிழைப்பதற்காக ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டுவந்து இந்நாட்டில் குடியேறினார்கள் என்று சொல்லுகிறீரே! இதுஎப்படிப்பொருந்தும்? என்று என்னைக்கேட்காதீர்கள். நேரே கோவைக்குச்செல்லுங்கள், அங்கிருக்கிறார். தோழர் T.A. இராமலிங்கஞ்செட்டியார், M. L. C. அவரைக்கேளுங்கள். அவர்கூறுவார் இதற்கு விளக்கம். அவர் கூறுவார் என்று ஏன் அவரை நான்உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன் என்றால், இப்போது, அவர் ஓர் புதுமுறையான ஆராய்ச்சியைக் கண்டுபிடித்து, முதன்முதலாக, அதனைத் திருப்பதிப் பல்கலைக்கழகத்திலுள்ள தமிழ்மாணவர் கழகத்திலே வெளியிட்டுள்ளார். அது என்ன ஆராய்ச்சிஎன்பதையும் உங்களுக்குக்கூறிவிடுகிறேன். "ஆரியர்கள் எங்கிருந்தோ இங்குவந்ததாகக்கூறமுடியாது"

(6-ம் பக்கம் பார்க்க)

# இந்தியா ஒரு நாடா?

(லாலா லஜபதிராய்)

மகா பாரதத்தில் இந்து தேசம் ஒன்பது கண்டங்களாக வகுக்கப்பட்டிருந்ததாகக் காணப்படுகிறது. அவ்வொன்பது கண்டங்கள் எவ்வெப்பகுதிகளைக் குறித்தனஎன்று இப்பொழுது தெரியவில்லை. ஆனால், சீன யாத்ரீகர்கள் இந்துதேசத்தை ஐந்துபெரிய பாகங்களாகப் பிரித்தார்கள். இவ்வைந்து பகுதிகள் பின்வருமாறு.

1. வடகண்டம்: பூஞ்சாப் மாகாணம், காச்மீரம், அதை ஒட்டிய மலை நாட்டு ராஜ்யங்கள், சிந்துநதிக்குமேற்கில்கிழக்கு ஆப்கானிஸ்தானம்முழுவதும்,இன்னும் சரஸ்வதி நதிக்கு மேற்கேயுள்ள பிராந்தியங்களெல்லாம் வடகண்டத்திலடங்கியிருந்தன.

2. மேல் கண்டம்: இதில் சிந்துமாகாணம், மேற்கு ராஜபுதனம், குஜராத்தின் ஒரு பகுதி, நர்மதையாற்றின்கடைபாகத்தின் கரைப் பிராந்தியமும் சேர்ந்திருந்தன.

3. மத்திய கண்டம்: கங்கை நதியின் இரு கரைகளிலுமுள்ள நிலப்பரப்பு முழுமையும் அதாவது தானேசுவரத்திலிருந்து சமுத்திர சங்கமுகப் பிரதேசம் வரையில் விரிந்தும் தென் கடலில் இமயகிரியிலிருந்து நர்மதையாற்றங்கரைவரையுள்ள பூமி முழுதும் இக்கண்டத்திற்குள்ளடங்கியிருந்தது.

4. கீழ்க் கண்டம்: அஸ்ஸாம், வங்காளம், கங்கைநதியின் கிளைகள் பெருகிப் பாயும் டெல்டா (Delta) நிலமும், சம்பல்பூர், ஒரிஸா. கஞ்சம் பிரதேசங்களும் கீழ்க்கண்டத்தைச் சேர்ந்தன.

5. தென் கண்டம்: தக்ஷிண தேசம் முழுமையும் இதற்குள் அடக்கமாகயிருந்தது. அதாவது, மேற்கே நாசிகையிலிருந்து கிழக்கே கஞ்சம் வரை, தெற்கே குமரி முனைவரை இத்தென்னாடு வியாபித்திருந்தது.தற்காலத்துப்பீரார்,தெலங்கானம், மகாராஷ்டிரம், கொங்கணம், ஹைதராபாத், மைசூர்;திருவாங்கூர்முதலானவை யெல்லாம் தென்னாட்டைச் சேர்ந்தவை. சுருங்கக் கூறின், மகாநதி, நர்மதை ஆறுகளுக்குத் தென் திசையிலுள்ள தேசம் முழுவதும் தென்னாட்டிற்குடையதே.

சீன யாத்ரீகன் ஹுவான் ஸாங்க் இந்நாட்டில் நீண்டகாலம் வசித்துப்பின்சுற்றுப்பிரயாணம் செய்த காலத்தில் இந்திய தேசம் எண்பது ராஜியங்களாகப்பிரிந்திருந்தது. அவைகளிற்சில மிக மிகச் சிறியவை, பெரிய வல்லரசுகளுக்குக்கீழ் அடங்கியிருந்தன. உதாரணமாக வட பாகத்தில் காபூல், ஜலாலாபாத், பெஷாவர், கஜினி, பன்னு ராஜ்யங்கள் கபீசாமன்னனுக்குக் கப்பம் கட்டிக் கொண்டிருந்தன. அவனுடையராஜானி 'சரீகார்' நகரமாயிருந்திருக்கலாம்.

அசல் பஞ்சாபைச் சேர்ந்த தக்ஷசிலை, சிங்காபுரா, ஊசா, பூஞ்ச், ராஜாவரிப் பிரதேசங்களின் மன்னரெல்லாம்காச்மீர தேசத்தரசனுக்குஉட்பட்டிருந்தார்கள்.

மிஞ்சிய சமவெளிப் பிரதேசம் முழுவதும், மூல்தான், சூரகூட சமஸ்தானங்களுடன், சிங்கார மன்னன் ஆட்சியில் அடங்கியிருந்தது.அவனுடைய ராஜதானி லாகூருக்கு அருகாமையிலிருந்தது.

மேற்கு இந்த தேசத்தில் சிந்து நாட்டரசனும் வல்லபி வமிசத்து மன்னர்களும் ஆட்சி புரிந்தார்கள்.

மத்திய கண்டத்தில் செங்கோல்செலுத்தியவன் மகாராஜா ஹர்ஷ வர்த்தனன். அவன் கன்னோஜ் நாட்டுமன்னன். அப்பொழுது ஜலந்தர் சமஸ்தானமும் வடக்கே இமய மலையிலிருந்து தெற்கே நர்மதையாறு வரையுள்ள பூமி முழுதும் அவனுடைய ஆட்சிக்குள் அடங்கியிருந்தது. இந்த எல்லைக்குள்ளிருந்த முப்பத்திரண்டு சமஸ்தானங்கள் அவனுக்குக் கப்பம் செலுத்திவந்தன. அவன் மகாராஷ்டிரதேசத்ததிபதியைத்தவிர, மற்ற(எல்லா) அரசர்களையும் போரில் வென்றவன். வட திசையில் காச்மீரம், தென்மேற்கே மகாராஷ்டிரம் கிழக்கே கஞ்சம் வரையிலும்தன்னுடைய சேனைகளைச்செலுத்திச்சென்று அந்தந்த இலாகாக்களிலிருந்த அரசர்களைக்கப்பம் கட்டும்படி செய்தான்.

தக்ஷிணத்தில் மகாராஷ்டிரம், கோசலம், கலிங்கம், ஆந்திரம், கொங்கணம், தான்யகடகம், திராவிட சோழநாடுகள் இன்னும் மலையகூடத்து ஒன்பது சமஸ்தானங்களும்தனித்தனிஅரசாட்சிபுரிந்து வந்தன.

(இந்துஸ்தான்)

---

## சுயமரியாதைப்பயிற்சிக் கல்லூரி

ஈரோடு

சுயமரியாதைப்பயிற்சிக்கல்லூரிஒன்று நிறுவப்பட்டுள்ளது. எப்ரல் 15ம் நாள் முதல் துவக்கம். அஞ்சல் வழியாகவும் நேரிலும் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி மேடையிற்பேசும் ஆற்றல்பெறுவதற்கான வழிகளை வினாவிடை வாயிலாகவும் புத்தகங்கள் வாயிலாகவும்அளிக்கப்படும். முழுவிபரங்களுக்கு தபால்தலையுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

பிரின்சுபால்,
சுயமரியாதைப்பயிற்சிக் கல்லூரி,
ஈரோடு.

---

## திருமணம்

14—3—45ல் பம்பாய் சீப்பன்—சிரோப்பாய்பாய் மேன்சன் கட்டிடத்தில் தோழர்களான "மணி—புஷ்பவதி"தம்பதிகளின் சீர்திருத்த திருமணம் ஷை நிலையத் தலைமையாளர்எஸ். டி. சவரிநாசன் அவர்கள் தலைமையில் தோழர் பி. எஸ். வடிவேல் அவர்களால் நடத்துவிக்கப்பட்டது.

மணமக்களின் ஒப்பந்தம் வாசித்து கையொப்பமிடப்பட்டு எவ்வித சடங்குமின்றி, தாலி கட்டுதலுமின்றி மோதிரம் அணிந்து மாலையணிவித்துக் கொள்ளப்பட்டது. மணமக்களுக்கு பெரியார் படமொன்றும், திராவிடநாட்டின்எழுத்துள்ளதூக்குப்பை யொன்றும்,தலைமையாளராலும், "தீ பரவட்டும்" என்ற நூல் செயலாளரவர்களாலும் பரிசளிக்கப்பட்டன. பின் பல தோழர் தோழியர்களால் மாலையணிவித்து நன்றி கூறிக்கொள்ளப்பட்டது.

---

## திராவிடர் கழகம்

திருநெல்வேலி பாளையங்கோட்டை

ஷை கழகத்தின் சார்பில் 10—3—45 சனிக்கிழமை மாலை 5-மணிக்கு சர். A. T. பன்னீர் செல்வம் நினைவுநாள் கூட்டம் தோழர் A. V. முத்தையா தலைமையில் நடந்தது. தோழர்கள் K. M. பிரமநாயகம், சமயபுரம் அருணசலம், B. ராமகிருட்டினன், இலக்குவனார் முதலியோர்கள் பேசினார்கள். K. P. துரைசாமிவந்தனம் கூறக்கூட்டம் இனிது கலைந்தது.

---


## டெண்டர் நோட்டீஸ்

1945–46ம் வருஷத்தில் ஜில்லாபோர்டின் ரஸ்தாக்களின் மராமத்து வேலைக்காக 1945ம் வருஷம் மார்ச்சுமாதம் 29ந் தேதி மாலை 4 மணிவரையில் ரிஜிஸ்டர் கண்டிராக்டர்களிடமிருந்து சீல்வைக்கப்பட்ட டெண்டர்கள் பெற்றுக்கொள்ளப்படும். இதன் விபரங்களும் டெண்டர் பாரங்கள்முதலியனவும் சைதாப்பேட்டை ஜில்லா போர்ட்என்ஜினியர் ஆபீசிலிருந்து ஆபீஸ் நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சைதாப்பேட்டை
19—3—45.

(Sd) T. S. கேதாரம்,
ஜில்லாபோர்ட் என்ஜினியர்.

# ★ அந்நாள் எந்நாள்? ★

(அருப்புக்கோட்டை C. சங்கரலிங்கம்)

கிறித்து பிறப்பதற்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்குமுன்னரே திராவிடர்களது தனிச் சிறப்பான நாகரிகம் செழித்தோங்கிய காலம். திராவிடர்கள் பகுத்தறிவுள்ளமக்களாய்த் திகழ்ந்தகாலம். கல்வி, கேள்வி, பண்புகளுக்குத் திராவிடமே இருப்பிடமாகக்கொண்டகாலம். கி. பி. 1923ல் R. D. பானர்ஜி சிந்துவிலுள்ளமோகஞ்சதாரோவையும், தென் பஞ்சாபிலுள்ள ஹாரப்பா என்னும் இரு மண்ணில் புதைந்த பண்டையநகரங்களை ஆராய்ந்தார். இவ்விருபழையநகரங்களின்நாகரிகம் பண்டைத்திராவிடர்களது என்றுசான்றுகளுடன் சாற்றுகின்றனர் சரித்திரப்போராசிரியர் பலர். சிலர் இக்கூற்றை மறுப்பாரும் உண்டு. எனினும். பண்டைத் திராவிடர்கள், ஆரியர் நம் நாட்டிற்கு வருமுன்பே செழித்த தனி நாகரிகத்தைக்கொண்டு இனிது வாழ்ந்து வந்துள்ளனர் என்பது ஒருதலை.

ஆரியர்கள் வஞ்சகவலை விரிப்பதில் கைதேர்ந்தவர்கள், வடநாட்டில் புஸ்யமித்ர சுங்கா என்னும் ஆரிய மன்னன் (கி மு. 188 முதல் 152 வரை) ஆண்ட காலத்தில் ஆரியரது ஆதிக்கம் அதிகம். இவனதுகாலத்தில்க்ஷத்திரியர்களுக்குரித்தாகிய இராமாயணம், மஹாபாரதம், ஆகிய இவ்விரண்டு நூல்களும் பிரமாணமாக்கப்பட்டது. இவனது காலத்தில் மனுதர்ம சாத்திரமும் எழுதப்பட்டது. இவை சரித்திரப் பேராசிரியர் ஜெயஸ்வெல் (Dr. K. P. Jayaswal) கூறும் கூற்று. ஆரியரது ஆதிக்கமே தன்னரசு என ஆண்டனன் இம்மன்னன்.

கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தென்னாட்டில் சேர அரசனும் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் அரசுரிமை அடைந்தான். நாட்டின் நலன்கருதி நன்றாகஆண்டான். வடநாட்டின் இமயத்தின் சிறப்பைக் கேள்வியுற்றான் இவன். அவ்விமயம்வரை தன்புகழ் நிலவவேண்டும் என்னும் வேட்கைகொண்டான். ஆரியரதுநாகரிகமும், கலையும் சிறிதுசிறிதாகத் தன் நாட்டில் பரவுதலைக்கண்டான். வட ஆரியர்களை எதிர்த்துப் போர்கள் பல புரிந்தான். வாகை சூடினன் இம்மன்னன். தனது இலாஞ்சினையாம் வில்லை வெற்றியின் அறிகுறியாய் இமயத்தின்நெற்றியில் பொறித்துத்தன் உயிரினும்இனிய தமிழகம் திரும்பினான். என்னே இவனது மறம்! பண்டைத்தமிழ் நூல்களில் இதற்குச்சான்றுகள் பல இருப்பினும் இவ்வுண்மைச் சரித்திரச்சம்பவம் ஆரியர்களால் 'புனைந்துரை' கட்டுக்கதை எனப் பகரப்பட்டு உண்மைச் சரித்திரத்தில் இடம்பெறாது போயிற்று.

இதன்பின், பகுத்தறிவுக்குப் புறம்பான பண்பற்ற புராணங்களும், சாத்திரங்களும், மூடப்பழக்க வழக்கங்களும் நம்நாட்டில் மலிந்தன. இவை நம்மை ஆட்கொண்டு அடிமைகளாக்கிவிட்டன. ஆரியரின் சூழ்ச்சிகளும்சாதிபேதங்களும் சூழ்ச்சிகளுக்கு அடிமையான நாம் பகுத்தறிவிருந்தும் பகுத்தறிவற்றோம். பகுத்தறிவற்றநாம் வீரமிழந்தோம். கலைகளைக் கொலைசெய்தோம். தோழர்காந்தியாரின் வலக்கரம் போன்று காங்கிரசில் அரும் தொண்டுகள் பலவாற்றி உழைத்து, உண்மைஉணர்வு பெற்ற தன்மானக்கட்சித் தலைவர் அண்ணல் ஈ, வே இராமசுவாமிப்பெரியார் நாட்டில் மக்களை அடிமையாக்கும் கருவிகளைக் கண்டார். ஊக்கத்துடன் உண்மையைஉலகினர்க்கு உரைத்தார். இத்துடனில்லாது, சமுதாய சீர்திருத்தங்களே அரசியல்சீர்திருத்தத்திற்கு அடிப்படை, சமுதாய சீர்திருத்தமின்றி அரசியலைச் சீர்திருத்த முடியாது என நினைந்து சமுதாய சீர்திருத்தங்களில் கவனம் செலுத்தினார். இதனையறியாதாரும், பிறரும் பெரியாரை நிந்தித்தனர்—நிந்திக்கின்றனர். எனினும் என்? பகுத்தறிவுசுடர்விட்டு எரியும்போது அறியாமை இருளுக்கு இனி ஏது இடம்?

பின்னர், தமிழுக்கு ஆரியமொழியால் வரவிருந்தபோராபத்தில் தமிழ்காத்தபெரியார், மதுவருந்திமதிகலங்கிக்கிடப்பான் போன்று பண்டைப் புராணங்கள், சாத்திரங்களால் மதிகலங்கிய நமக்குப் பகுத்தறிவையூட்டி நம் அறிவின்மையானதூக்கத்தைவிட்டு எழுப்பினார். திராவிடர்களே! அறியாமையால் தூங்கியதுபோதும். பிறப்பால் உலகில்உயர்ந்தார் தாழ்ந்தாரில்லை. வஞ்சகச் சூழ்ச்சிகள், மூடப்பழக்கவழக்கங்களை ஒழிக்க உன் பகுத்தறிவுக் கண்ணைத்திற. நாட்டைக்காக்க, நாடு நலனுற உன் சேவையைச் செய். பண்டைத் திராவிடர்களது பழையபண்பே பண்பு எனப்பழைமைசொல்லிப்பயனில்லை. நம் பைந்தமிழ் மொழியைஆரிய ஆபத்தில் காத்த நாம்திராவிடநாட்டைக் காப்பாற்ற வேண்டாமா? செங்குருதி குதித்தோடும் செந்தமிழ்ச்செல்வனுக்கு நாட்டைக்காப்பது முக்கிய கடமையல்லவா? எங்கே நமது வீரம்? எங்கே நமது நாகரிகம்? பண்டைத் திராவிடர்களுக்கு நாம் எவ்வகையிலும் சளைத்தவர்களில்லை என்பதை நிரூபிக்கவேண்டும். பண்டைத் திராவிடர்களின் நாகரிகத்திற்கும், கலைக்கும் மேலானவைகளை நம்திராவிடநாட்டில் மறுபடியும் நிலை நிறுத்தல் வேண்டும். அதுவே நம்கடன், கொள்கை என்பதை எடுத்துக்காட்டினார் பெரியார், அண்ணல் பெரியாரது அரும் பெரும் முயற்சிகளின் பலனாக இப்பொழுது திராவிட நாடெங்கணும் "திராவிடநாடு திராவிடர்க்கே" என்னும் புதியதோர் வீறு காணப்படுகின்றது. இப்புதிய எண்ணம் நாடெங்கணும் பூ[illegible]து மலர்கின்றது. திராவிட மெங்கணும் புதிய கழகங்கள்! புதியவீறு! திராவிடர்கள் விழித்துக் கொண்டனர். தனித் திராவிடம் அடைவதே நமது நோன்பெனக்கொண்டனர். அதனை அடைந்தே தீருவோம் என்னும் மறம் வாய்க்கப்பட்டு ஊக்கவேலையிலீடுபடுகின்றனர். ஆம்; பகுத்தறிவுடன்கூடிய இப்பிரிவினை இயக்கம் வகுத்துத் திராவிடர்களாகிய நாம் (பழைய திராவிடர்கள்போன்று) அறனும் மறனும் ஒன்றி வாழ நம்கடமை மிகப்பெரிது. பகுத்தறிவும்தியாகமும், வீரமும்கொண்டகடமையை நாம் சரிவரச் செய்தால் நாம் தனித் திராவிட நாட்டின் போர்முரசு அண்மையில் கொட்டக் கேட்போம். அந்நாள் நமக்கு ஓர் பெருநாள்!—திருநாள்! அந்நாள்—எந்நாள்?!

## நிகோலாஸ்

4ம் பக்கத் தொடர்ச்சி

டிருப்பாரல்லவா! சியாங் கொடுத்த தேநீரை, ஸ்டாலின், எங்கே[illegible]வாக இருந்ததால், கவனியாது, வாங்கிப்பருகிவிட்டிருப்பார், அடுத்தவிநாடி தெரிந்ததும், திடுக்கிட்டுஓடுவார், பருகியதேநீரை வாந்திஎடுக்க!

இவ்விதமாகவன்றோ இருக்கும், என்று கேலிசெய்கிறார்நிக்கோலஸ். கேலிசெய்கிறாரேஎன்று கோபம்வருகிறதே தவிர, இந்தக்கொடுமையான, கேவலமான நிலைமையை அனைவரும் ஒன்றுகூடிச்சாடவேண்டும்என்ற எண்ணம் [illegible]கிறது. பழமைஎன்றும், சம்பிரதாயம் என்றும்பலப்பலபேசி-இந்தப்பாதகத்தை நிலைத்திருக்கச்செய்கின்றனர். இந்தக் கொடுமையைக்களையக் கடும்போரிடும் வீரரே, டாக்டர் அம்பேத்கார்! அவர் பீவர்லி நிக்கோலசிடம் கூறினார், "இந்தியாவிலே இதுவரை தோன்றியவர்களுக்குள், காந்தியாரே, மிகப்பெரிய எதிரி, தீண்டாதாருக்கு!"என்று. அரிஜன சேவாசங்க கர்த்தாவை, தீண்டாமை ஒழிக்கத்திருவுள்ளம் கொண்டுள்ள தேவனை, தனித்தொகுதிசென்றடைவிக்காதீர், உம்மைவிட்டுப்பிரிந்தால் நான் உயிர்வாழேன் என்றுரைத்துப்பட்டினிகிடந்த காந்தியாரைத் தீண்டாதாருக்கு முதல்நம்பர் விரோதி!-என்று கூறுவதா? தகுமா, முறையா? என்று தேசியவாதிகள் தேம்பக்கூடும். ஆனால் டாக்டர் அம்பேத்காரின் அந்த "தீர்ப்பு" பலவழக்குகளைக்கண்டு ஆராய்ந்து, ஆர அமர யோசித்துத் தரப்பட்டதேயன்றி, அவசரத்திலே அள்ளிவீசப்பட்டதல்ல! காந்தியார், தீண்டாதாரின் முதல்நம்பர் எதிரிதான், அதில்சந்தேகம் இல்லை. எப்படி?

(தொடரும்)

# 'கல்கி'யின் கண்ணீர்

—[முழுமதி]—

ஐயோ, பாவம்! கல்கி ஆசிரியர் கண்ணீர்விடுகிறார், ஏன், எதற்கு என்றுகேட்கிறீர்களா? கும்பகோணம் மகாமகத்தில் மகாமகக்குளத்தில் முழுகி, மாகேஸ்வரனுடைய மகிமையைப்பெற மக்கள் இலக்ஷம் இலக்ஷமாக வந்திருந்தார்களாம், அத்தனை மக்களும், இரயில்வேஅதிகாரிகளும், சுயமரியாதைக்காரர்களும் எவ்வளவுசொல்லியும் கேளாமல் சென்று, குளத்தில் முழுகித்திரும்பினார்களாம். 20 ஆண்டுகளாகக் காடியாகக் கத்திக்கண்ட பலன் என்னஎன்று கண்ணீர் விடுகிறார்.

இந்துமதம்என்ன அவ்வளவுஇலேசானதா? அரைக்கீரையா? அப்படியே ஆணிவேருடன் அகற்றி எறிந்து விடுவதற்கு? அதனுடைய தொன்மைவாய்ந்தபுகழ் என்ன? நான்கு ஏற்றத்தாழ்வுள்ளசாதிப் பிரிவின் தத்துவம்என்ன? கடவுள்நாவால் நவின்ற நான்கு வேதங்களின் தன்மை என்ன? [illegible] ...னை, ...தில் தனக்கு எதிரிஎனப்ப... ...மல் ..., அக்கினியே.சார்பலாக்குஎன்று இருக்கும் நீதிஎன்ன? கிருஷ்ணன் உபதேசித்ததைஎன்ன? இராமாயண மகாபாரத இதிகாசங்கள் என்ன? உயிர்ப்பலிஎன்ன? சோமபானம்என்ன? அமுதகட்டிக்காக்க பிரம்மா முகத்தில்தோன்றிய அதிஉன்னதப்பிராமணர்கள் என்ன? அவர்கள்எவல்படி மன்னுதிமன்னர்களும், வியாபாரமுறைக்கு வைசியர்களும், கள்ளமில்லாத கடை வருணத்தார்களும், காலால்இட்ட வேலையைத் தலையால்செய்யக்காத்திருந்த பண்டைப்பெருமைஎன்ன? சிவன், பிரம்மா, விஷ்ணு, அவர்களுடைய பலஇல்லக்கிழத்திகளுக்கும், மக்கள் சுற்றம்சூழ இருக்க ஆயிரக்கணக்கில் கோயில்கள் என்ன? அதில் ஆறுகால பூஜைசெய்ய, நான்மறை கற்றபிராமணர்கள் என்ன? பிரிட்டிஷ் இந்தியாவில்அமோகமாகப் பெரியபெரிய வேலைகளிலிருக்கும்மதிப்பு என்ன? எல்லோரும் சாமி, சாமி என்று கூப்பிடும் சாரம் என்ன? சுயமரியதைக்காரர்கள் சொல்லுவதுபோல் செவிசாய்த்திருந்தால் தன மானமுடையதமிழனாக இருந்தால், ஹிந்து, சுதேசமித்திரன்,கல்கி ஆனந்தவிகடன் முதலியசெய்தித்தாள்களைப்படிப்பது மாத்திரம் அல்லாமல் புகழுரையும் சொல்லுவார்களா? இலாபம் அதிகம் கிடைப்பது, தமிழர்களால் அதிகமாகவாங்கப்படுவதாலல்லவா? என்ன செய்வது? ஆத்திரம்வந்து கண்ணீர் விட்டால்அறியாமையுங்கூடவேவந்துவிடுவது இயற்கையே.

மேலே குறிப்பிட்ட அத்தனையும் தன்கட்டுக்குலைந்து புதிய பாதைக்குப் போய்க்கொண்டிருக்கிறது. நீண்டதாடியுடன் திகழும் தமிழ்ப்பெரியார் இராமசாமி அவர்கள் போட்ட தன்மானம், பகுத்தறிவு என்றஇருவித்துக்களும் இரண்டு பெரியஆலமரங்களாகி விட்டன. அம்மரநிழல்களில்வெகுஆனந்தமாக ஜனங்கள்உட்கார்ந்துகுதுகலப்படும் தன்மையைப்பார்த்து ஆத்திரக்கண்ணீர் விடுகிறார்கள்.மிகவும் அனுதாபத்துக்குரிய செயல் அல்லவா? என்னசெய்வது, நியாயத்தை ஒப்புக்கொள்ளாமல், இனத்திலும் பொறாமைதான்வெடிமருந்துசாலைஎன்பதுபோலக் கோணல்வழியாகமதியைச்செலுத்தி, ஆத்திரம் அடைகிறார்கள். அறிவு அகன்றுவிடுகிறதுபாவம். அதனால்தான் இவ்வுலக வாழ்க்கையே ஒருபெரிய போராட்டம்என்பதைமறந்து, மகாமகத்திற்குச்.சுயமரியாதைக்காரர்கள்சொல்லுவதைச்செவிசாய்க்காமல்,மக்கள் இலக்ஷக்கணக்காகச்சென்றிருந்ததைப் படம்பிடித்து நிரூபிக்கிறார் கல்கிஆசிரியர். ஆனால் தன்னைப்பற்றிச்சிந்தனைசெய்ய மறந்துவிட்டார். ஏன்? ஆங்கிலேயனால்உருவாக்கின காங்கிரஸில் எல்லோரும்கூடிக்குட்டிக்கரணம்போட்டு,எத்தனையோசெய்து பார்த்தார்கள், சத்தியாக்கிரகம்செய்தார்கள். எல்லா இந்தியர்களும் ஒன்று என்றார்கள். தீண்டப்படாதவர்களை ஹரிஜனங்கள் என்று சொல்லி மயக்கினார்கள். எல்லாக்கோயில்களையும் ஹரிஜனங்களுக்குத்திறந்து விடவேண்டும்என்றார்கள். இராட்டினத்தால் சுற்றின நூலினால் செய்தகதரைத்தான் இந்தியமக்கள் எல்லோரும் கட்டவேண்டும் என்றார்கள். சத்தியம், அஹிம்சை, அந்தராத்மா அளிக்கும் அருமையான சொல்லே அமுதவாக்கு என்றும்,அதுதான் எங்கள் இலட்சியம் என்றார்கள். எல்லாப்பத்திரிகைகளும் அதையே ஆதரித்தன. கண்டபலன் என்ன? மத்தியஅசம்பளியில் காங்கிரஸ் நுழைந்ததுமுதல் வெட்டுப்பிரேரணைகள் யாவும் பெருவாரியான ஓட்டால்வெற்றி பெற்றது. பலன் பூஜ்யம். அமரிதுரை அத்தனை தடபுடல்களுக்கும் அப்பனே பலிக்காது என்றார். ஆதலால் உலகமே ஒருபெரிய போராட்டத்தில் அடங்கும், அதில் வெற்றி அல்லது தோல்விஎன்பது இயற்கை. பின்சொல்லும் கருத்துஆழ்ந்த கருத்துக்கு ஒப்ப முடிந்ததா? எல்லோரும் அதை முழுமனதுடன் நியாயம் என்று ஒப்புக்கொள்ளுகிறார்களா? இல்லையா? என்பதுதான்முக்கியம். எல்லாஉலகமக்களும் அந்தநம்பிக்கையில்தான் வாழ்நாளை வீண்நாளாக்காமல்,வெற்றி அடைய, இன்பம் அடைய முயற்சிசெய்கிறார்கள். அறிவுடைய உலகம் போற்றுவதும் அதைத்தான்.அதற்கு ஆகத்தான்ஒவ்வொருகாரியத்தையும் அலசிப்பார்த்து உண்மையை அறியப்பகுத்தறிவுவேண்டும் என்று சொல்லுகிறார். ஒவ்வொருமனிதனும் தன்மானத்தோடு வாழவேண்டும்என்றும் சொல்லுகிறார்.வாழ்க்கையில்சலிப்படையாத ... மாலைசூடின தாடிமனிதர். அவர் சொல்வது ஒருஅணையாவிளக்கு.அது ஒருதனிப் பெரும்ஒளி. ஒளிமன்னன்என்ற பகுத்தறிவுதான் சூன்யமில்லாமல்காரியம்செய்யும்,செய்தது,செய்துகொண்டிருக்கிறது. இதனை அறியமுடியவில்லை, காரியத்தைச் சாதித்துவிட்டோம் என்ற வீராப்புப் பேசும் அந்தக் கல்கியால்!

—:(0):—

## பெரியார் ஓடம்

11ம் பக்கத் தொடர்ச்சி

கள் ஆயிரம் உண்டு என்பதையும்உணர்ந்துஅதை ஆண்மையுடன் நீந்திவிடுவோமென்று வீண் பெருமை கொள்வோர் விர்ரெனச் சுழலும் சுழலை அடைந்து அமிழ்ந்து போவார்கள், என்பதையும் உணர்க. ஆம், ஆரியம் மேற்பார்வைக்கு. ஆறு போன்றுளது. ஆனால் ஆற்றில் நிறைந்துள்ள மடுக்கள் போன்று ஆரியத்திலே பலஉள. அதனையே ஆராய்ந்துஅறிந்தார் நம்பெரியார். அதனின்றும் (திராவிட நாட்டு ஆரியன்—காங்கிரஸ் குழு) விட்டு விலகினார். எனவே ஆரியம் என்னும் ஆற்றைக்கடக்க அறிவு என்னும் ஓடத்தை யளிக்கிறார் நம்பகுத்தறிவுத்தந்தை பெரியார். அவரின் பேரறிவுரையை உறுதியாய் மதியினில்கொண்டு சதுப்பு-சேரினும், குறுநிமிசச் சேரினும் காட்டுவோம் நம்நாட்டுப்பற்றை. ஆரியம் என்னும் ஆற்றைக்கடக்க அதோ புறப்பட்டுவிட்டது பெரியார் ஓடம். அறிவு என்னும் அப்படகை ஆண்மை என்னும் கோலின் உதவியால் அக்கரையில் சேர்த்திடுவோம் வாரீர்!

தந்தி:—"புறமார்க்" திருச்சி.



## இன்ப வாழ்வு

2-ம் பக்கத் தொடர்ச்சி

உலகு தொடங்கிய நாள்முதல் இன்றுவரைக்கும்—உருவமோ அருவமோ அருவுருவமோ, உண்மையோ இன்மையோ அன்றிச் சட்டவடிவமோ. இன்னபடியென்று சதகோடியில் ஒருபகுதியேனும்—ஓரிடத்தும், 'ஒருவனாலும் கண்டறிந்திலாததைக் கடவுள் என்று சொல்லி—இதில் இரண்டு லக்ஷம் ஆக்ஷேபசமாதானம் கிளப்பி— பாரமார்த்திகப் போரால் பிள்ளைகள் பெண்டுகள் உறவினர் தேசத்தாரின்நிலையையும்கவனிக்காமல்நெஞ்சை உழலவிட்டு—மற்றும் அக்கடவுளுக்கு ஆயிரம் திருநாமம் சூட்டி அதற்குக் கல்யாண குணங்கள் கற்பித்து இந்நாள் மட்டும் தகவலில்லாத பொருளுக்குக் கோடிக்கணக்கான பொருளைச்செலவிட்டுக்கோயில்கட்டிப், பார்த்துச் செய்தது போல் உருவச்சிலைகள் உண்டாக்கி—அதற்கும் உமக்கும் தரகர்களை நியமித்துத்தரகர்மூலம் படையலிட்டுத் தரகுக் கூலியுடன் சொத்தைப் பரிகொடுத்து உடல்—உயிர்களையும் அதற்கே தத்தம் என்று சொந்தநாட்டின் முன்னேற்றத்தில் கருத்தின்றிக்கிடக்கின்றீர்கள். அதுவன்றி —அந்தக்கடவுள் நேரில்வந்து வேதம் எழுதியதாகவும்—பிறகு அவரே பலபடியாய் அவதாரம் செய்து வேதாந்தம் உபநிஷத்துக்கள்—இதிகாசம் புராணம் எழுதியதாகவும் சொல்லுகிறீர்கள். மேலும் அக்கடவுள் மக்களுக்கு ஏற்பாடு செய்த இத்தொல்லைகள்போதாவென்று பல பல மதங்களை ஏற்படுத்தினதாகவும் நினைக்கின்றீர்கள். இதனால் மக்களின் அறிவு விருத்திக்குப் பாடுபடவேண்டிய பண்டிதர்கள் உம்மிடம் மிகுந்த பொருளையும் பறித்துக்கொண்டு மேலும்மேலும் இத்தகைய—கடவுள் போரால்—நூல்எழுதும்நிலையை உண்டாக்குகின்றீர்கள். நீங்கள்மாத்திரமின்றி ஆரியருடன்கலப்பற்று வாழ்ந்துவந்தபச்சைத்தமிழர்காலம்சிறிது போக மற்றையதான—இத்தனை நீண்டகாலமாய் நாட்டில்பிறந்து இறந்தஉங்கள் மூதாதையர்களும், இவ்வாறே நம்பி நம் பிச்சமுகத்தைஎதும்ற்றநிலைக்குக்கொண்டுவந்தனர்—நீங்கள் இந்நாளில் கண்ணுக்கெதிரில் உம்பழக்கவழக்கத்தின் பயனைக் கண்டு உணர்ந்தும் அதைநீக்கவேண்டும் என்பார்க்கு உமது மூதாதைகள் அவ்வாறுநடந்துவந்ததால் சுகமாயிருந்ததாகவும் சொல்லிவிடுகின்றீர். வெளகிகம் ஒழுங்குபடாத நிலையில் உங்களைச் செல்லரித்த துரும்புகள்போல் நீங்கள் ஆக்கிவருவதை உணாமல் வேதசம்மந்தமான வைதிகப்போரால் இரவுபகலாய் மெலிந்துபோகிறீர். தேசமக்கள் சம்மந்தமான பொதுப்பணியில் சிறிதும் கவனம் செலுத்தும் விசாலபுத்தியை அடைய உமக்குச்சிறிதும் அவகாசம் இல்லாத நிலையை நீங்களே உண்டாக்கிக்கொள்கின்றீர்கள்.

பார்ப்பனன்உயர்வுஎன்கின்றீர்கள்க்ஷத்திரியன் இரண்டாம் எண் என்கிறீர்கள்; வைசியன் அதன் அண்டைப்படி என்கின்றீர்கள்; சூத்திரன் கடைசி என்கின்றீர்கள்; பஞ்சமன் என்கின்றீர்கள். இன்றைக்குமாத்திரமன்றி இவைகளை உண்டாக்கியதாய்ச் சொல்லும் பிரமா ஒருவன்இருந்தால் அவன் காலத்திலேயே இவை சுத்தப்பொய் என்பதைச்சிந்திக்க மறுக்கின்றீர்கள்.

இந்த நிலையில் சுதந்தரம் சமத்துவம் சகோதரத்வம் இவைகள் உமது இதயத்தில் இடம் பெறுவதெப்படி? (பு. மு.)

——

# பெரியார் ஓடம்

இளவழுவன், கருவூர்.

"தமிழா, என்ன ஆழ்ந்த தூக்கத்திலே மூழ்கிக்கிடக்கிறாய், உனது நிலைமையை அறியவில்லையா? எழு! எழு! விரைவில் செல்லுவோம். இருக்கும் காலம்குறைவு, போகவேண்டியதூரம்தொலைவு' என்றான் வீரன்.

உண்மையில் நான் ஆழ்ந்த தூக்கத்தில் மூழ்கிக்கிடக்கவில்லை. பழக்கையிலே அமர்ந்து பாதிக்கண்ணை மூடியவண்ணம் ஒரு ஏட்டைப்படித்துவிட்டு அதிலுள்ள அர்த்தமற்ற அறிகதையைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுதுதான்வீரன் மேற்சொல்லியதை வீரமுழக்கத்துடன் கூறிஎன்னை எழுப்பினான்.

என்ன வீரா! நீசொல்லியது எனக்கொன்றும் புரியவில்லையே "தமிழாஎழு எழு விரைவில்செல்லுவோம்" என்றாயே எங்கே? என்றேன்,

ஆரியரின் கூட்டு ஆகாதெனவறிந்து அருமைத் திராவிடத்தைப் பிரிக்க, பிரிவினை முரசுமுழங்க ஓர் படை தேவையில்லையா? அதற்குத்தானழைக்கின்றேன், தமிழா வாஎன்று. வீரத்தமிழா! ஆரியமெனும் காரிருள் தமிழகத்தைச் சூழ்ந்த இந்நேரத்திலா, செல்வமும் இன்பமும் குவிந்திருந்த நாட்டில் குப்பையும் கூளமும் துன்பமும்குடிகொண்டவேளையிலா இனிமைத்தமிழ் ஆரியருக்கு அடிமைப்பட்டு அல்லலுற்றுக்கிடக்கும் இவ்வமயத்திலா, பகல் முழுவதும் உழைக்கும் பாட்டாளிக்குப்பாதிவயிற்றுக்குக்கூழ் கிடைக்காமல் பதறும் இச்சாலத்திலா தன்னையும் மறந்து தூங்குவது? தூங்கும் தமிழா! உன்னை நான் தட்டி எழுப்புகின்றேன். விரைவில் எழுந்துவா. வெட்டியுரையல்ல என்றான் வீரன்.

வீரனுடைய உரைகளைக் கேட்டநான் திடுக்கிட்டு படுக்கையை விட்டெழுந்து கலங்கியமனதுடன் வீரன் உரைகளை யோசித்துக் கொண்டிருந்தேன்.

ஏன்? இன்னுமாகலக்கம். அந்நியருக்கு அடிமைப்பட்டு, அறிவிழந்து, ஆண்மை குன்றிக், குலைந்த நீஏன் இவ்வாறுதயங்குகிறாய்? எங்கே உன் ஆண்மை? உனது மாண்பை மறந்தனையோ? உரைக்கின்றேன் கேள். தன்னைத்தாக்க வருகின்ற களிற்றின் மீது தன் கைவேலையெறிந்து அதன் உயிரைப்போக்கி, மேலும்தன்மீது வரும்களிற்றினை எறிதற்கு வேல் நாடித் திரியும் வீரனொருவன் தன்மார்பிலே தைத்துக்கிடக்கும் வேலினைக்கண்டு, அதனைப்பறித்துக் கொண்டு மகிழ்கின்றானும். என்னே தமிழருடைய ஆண்மை! வெண்ணிற்பறந்தலை எனும் போர்க்களத்தில் சோழன், கரிகாலனோடு போர் புரிந்த பெரும் சேரலாதன்என்னும்சேரமன்னன், தன்மார்பிலேதைத்துஉருவின புண்ணும் புறப்புண்ணாகும் என நாணி, வாளொடு வடக்கிருந்து உயிர்துறந்தனன் என்றால் அவனுடைய வீரத்தையும், மானத்தையும் எவ்வாறு அளவிடலாகும். இம்மட்டுமா! பெண்மகளிரின் வீரச்செயலை என்னென்றியம்புவது? நரம்புகள் மேலெழுந்து தோல் திரைந்த முதியவள் ஒருத்தி, தன்மகன் அமரில் புறங்கொடுத்தனன் என்று சிலர் கூறக்கேட்டு கொண்டு அவளுக்குச்சினம் "என்மகன் அமரில் புறங்காட்டியது உண்மையாயின் அவன் பாலுண்டகொங்கையைச்சிதைத்திடுவேன்," என்றுஅமர்க்களம்சென்றாள். தான்கைக்கொண்ட வாளினால் அக்களத்தேகிடந்த பிணங்களைப்புரட்டிப்பார்த்து வந்தாள். பகைவனது வேல் தன் மகன் மார்பில்பாய்ந்து மடிந்து கிடப்பதைக் கண்டாள். அவனைப்பெற்ற நாளினும் பெரு உவகை கொண்டாள். மற்றொரு வீரமகள்முன்னாட்போரில் [illegible] யும் தமையன்மாரையும் [illegible]ந்தாள். பிறகும்போர்முரசின்முழக்கம் [illegible] தன்குடிக்குஒருவன் போர்செய்ய வேண்டுமென விரும்பி, தன் ஒரே மகனை அழைத்து, குடுமியில் எண்ணெய்நீவி, வெள்ளாடை உடுத்தி வேலினைக் கையிற்கொடுத்து செருமுகம் நோக்கிச்செல்க என விடுத்தாள், என்னே அந்தப்பெண்ணின் வீரம், "மானம்வரின் உயிர்நீப்பரன்றோ" இத்தகைய மேன்மைக்குணம் படைத்தவரன்றோ நம் தமிழர்கள். அத்தகைய வீரகுலத்தில் உதித்தவர்களன்றோ நாமும்.

ஆம் வீரா, உண்மையே. ஆனால் அத்தகைய வீரம் எங்கே? அது நம்மைவிட்டு எப்படி அகன்றது? நீஉரைப்பதைக்கேட்டதும் என்மனம் துடிக்கிறது. வீரா, உண்மையாகவே என்மனதில் திகிலும், திகைப்பும் ஏற்படுகிறதே. அந்தோ, அந்தோ என்னையும் அறியாமல்—என்மனம் ..............."

ஆறு அழகானது என்பதை அனைவரும்அறிவர். ஆனால் அதில் ஆழமானமடுக்

(10-ம் பக்கம் பார்க்க).

# சென்னை மாவட்டத் திராவிடர் (ஜஸ்டிஸ்) மாநாடு

1—4—45 ஞாயிறு காலை 9-30க்கு

## செயின்ட்மேரீஸ் மண்டபத்தில் நடைபெறும்

தலைவர்: திருச்சித் தோழர் என். சங்கரன்
திறப்பாளர்: தோழர் என். அர்ச்சுனன்
கொடியேற்றுபவர்: போளூர் சுப்பிரமணியம்
தாலமுத்து—நடராசன் படத்திறப்பு: தோழர் ஆசைத்தம்பி

*பெரியார், அண்ணாத்துரை, டி. சண்முகம், ஆதிமூலம், ஜெ. எஸ். கண்ணப்பர், அன்பழகன், ஜனார்த்தனம், சம்பத், இந்திராணி பாலசுப்பிரமணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.*

வரவேற்புக் கட்டணம் 1—0—0. நுழைவுக் கட்டணம் 0—4—0.

---

## தாலமுத்து — நடராசன்

நினைவுக் கட்டிடம்

2—4—45 திங்கள் மாலை 6-மணிக்குச் சென்னை மூலக்கொத்தளம் மயான வெளியில்;
பெரியார் அவர்களால் திறந்துவைக்கப்படும்.

---

# "சிவாஜி கண்ட இந்துராஜ்யம்"

**29—4—45 ஞாயிறு மாலை 6-மணிக்கு**

## சென்னை செயின்ட்மேரீஸ் மண்டபத்தில்

மேற்படி நாடகம் நடைபெறும்.

டிக்கட் விபரம்:— ரூ. 5—8—0, 2—4—0, 1—2—0, 0—9—0.

*சென்னை சுயமரியாதைச் சங்க நிதிவசூல் கமிட்டியார்.*





கைதேர்ந்த ஆட்களைக்கொண்டு தயாரிக்கும்

# கிளிமார்க் பட்டணம் பொடி.

தென்னிந்தியா எங்கும் புகழ்பெற்றது. காரம், மணம், நிறம், வாடை கமழும்,
எமது கிளிமார்க் பட்டணம் பொடியை உபயோகியுங்கள்!
ஒருமுறை உபயோகித்தால் என்றும் நீங்காது ஞாபகம்.

விலை விபரம்:— நீ-1. பவுன்கலர் வீசை 1-க்கு ரூ. 10—0—0.
நீ-1. கருப்புநிறம் வீசை 1-க்கு ரூ. 9—0—0.

*ஏஜண்டு இல்லா ஊர்களில் ஏஜண்டு தேவை.*

**ஏ. எஸ். ராஜன் கம்பெனி,**
*பழையவண்ணாரப்பேட்டை, சென்னை.*


Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
317—319 Hodgsonpet Conjeeveram.